பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 08 செவ்வாய்க்கிழமை (22-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:147

## வாஷிங்ரன் கூட்டத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டதன் எதிரொலி

# பேச்சுக்களில் கலந்து கொள்வதை புலிகள் தற்காலிக இடைநிறுத்தம்!

## பிரதமர் ரணிலுக்கு அன்ரன் பாலசிங்கம் கடிதம் மூலம் அறிவிப்பு
## ஜப்பான் உதவி மாநாட்டுக்கு செல்வதில்லை எனவும் தெரிவிப்பு

லண்டன்,ஏப்ரல்22

**சமாதான முன்னெடுப்புகள் தொடர்பான சில முக்கிய விடயங்கள், அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் ஆகியன குறித்து விடுதலைப் புலிகள் அதிருப்தியும், கவலையும் கொண்டிருக்கிறார்கள். அதனால், இனி சமாதானப் பேச்சுகளில் கலந்து கொள்வதைத் தற்காலிகமாக இடைநிறுத்துவது என்று புலிகளின் தலைமைப்பீடம் முடிவு செய்திருக்கிறது.**

**எதிர்வரும் ஜூனில் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றுவதில்லை என்றும் புலிகளின் தலைமைப்பீடம் தீர்மானித்திருக்கிறது.**

**தலைமைப் பீடத்தின் தீர்மானத்தைப் புலிகள் தரப்புப் பேச்சுக்குழுவின் தலைவரும் மதியுரைஞருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று திங்கட்கிழமை கடிதம் மூலம் அறிவித்திருக்கிறார்.**

சமாதானப் பேச்சுக்களில் தற்காலிகமாக கலந்துகொள்வதில்லை என்று முடிவுசெய்தாலும் இனப்பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலமே அரசியல்தீர்வு காணவேண்டும் என்பதில் விடுதலைப் புலிகள் பற்றுறுதியுடன் இருக்கிறார்கள். ஆகவே, யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இயல்பு நிலையை ஏற்படுத்துவது தொடர்பாக உள்ள அம்சங்களைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்துங்கள். அதன்மூலம் சமாதான முன்னெடுப்புகளில் அரசு மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்றும் அன்ரன் பாலசிங்கம் தனது கடிதத்தில் பிரதமரைக் கேட்டிருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் அனுப்பியுள்ள கடிதத்தின் முழு விவரமும் வருமாறு:-

பிரதமர் அவர்களுக்கு,

எங்கள் தலைமைத்துவத்தின் முடிவுப்படி தற்போதைய சமாதான நடவடிக்கைகள் தொடர்பான சில முக்கிய விடயங்களில் எமது இயக்கத்துக்கு ஏற்பட்டுள்ள ஆழமான அதிருப்தியையும் விசனத்தையும் தங்களின் அவசர கவனத்துக்கு கொண்டுவர நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

சமாதான நடவடிக்கைகளுக்கு இடர் ஏற்படுத்தக்கூடிய சில வன்செயல் சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும், ஒரு வருடத்துக்கு மேல் நடைமுறையில் இருக்கும் யுத்தநிறுத்தமும், பிரதான தரப்புகளுக்கு இடையிலான ஆறுசுற்றுப் பேச்சுக்களும் தொடர்ந்து வெற்றிகரமாக அமைந்து வந்திருப்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இனப்பிணக்குக்கு சமாதான வழிகளில் நிரந்தர்த் தீர்வு காணவேண்டும் என்பதில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு இருந்த நேர்மையான - திடமான - உறுதிப்பாட்டின் வெளிப்பாடே நிலைத்து நீடித்த யுத்தநிறுத்தமும், சமாதானப் பேச்சுகளின் முன்னேற்றமும் என்பதை நீங்கள் நிச்சயம் ஏற்றுக்கொள்வீர்கள். பரஸ்பர நல்லுறவும், திறந்த ஒளிவுமறைவற்ற கலந்துரையாடலும், திறமையான புத்திசாதுரியமான அனுசரணையாளர்களின் வழிகாட்டலும் பேச்சில் ஈடுபட்டோர் மத்தியில் நம்பிக்கையையும், உறுதியையும் வளர்த்து, பேச்சுக்கள் குறிப்பிடத்தக்களவுக்கு முன்னேற உதவின. சமத்துவமான - இணையான - பங்களிப்பின் அடிப்படையில் (11ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கட்சி - மு.கா. உறவை சீர்ப்படுத்த பிரதமர் வியாழனன்று திருமலை வருகை

## அங்கிருந்து அமைச்சர் ஹக்கீம் தகவல்

திருகோணமலை,ஏப்.22

"பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் வியாழக்கிழமை திருகோணமலைக்கு வருகின்றார். ஆளும் ஐ.தே.கட்சிக்கும் அதன் பங்காளியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகலைத் தணித்து, இருதரப்பு உறவை சீர்படுத்துவது குறித்து பிரதமருடன் அப்போது விரிவாகப் பேச்சு நடத்துவேன்."

- இவ்வாறு நேற்று திருகோணமலையில் வைத்துத் தகவல் தெரிவித்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்குமிடையிலுள்ள முறுகல் நிலை, பிரதமர் - அமைச்சர் ஹக்கீம் நேரடிப் பேச்சுக்களை அடுத்து நீங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மூதூரில் கடந்த மாதம் 31ஆம் திகதி இரு முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டனர். இந்த இளைஞர்களில் ஒருவரின் தாயார் கடந்த 14ஆம் திகதி தற்கொலை செய்துகொண்டார். அதையடுத்து மூதூரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. பதற்றத்தைத் தணிக்க பிரதமரின் பணிப்பின் பேரில் அமைச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு வெற்றியின் 3ஆம் ஆண்டு இன்று

கிளிநொச்சி,ஏப்.22

ஆனையிறவு ஸ்ரீலங்கா படைத்தளம் விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்ட 3ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

நினைவுதினத்தை உணர்வுபூர்வமாகக் கொண்டாட விசேட நிகழ்வுகள் வன்னியின் வடமுனைப் பகுதியில் இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மஞ்சல், சிவப்பு கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு அப்பகுதி விழாக்கோலம் பூண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## கடல் போக்குவரத்துக்கள்:

# கடற்படையினர் - கடற்புலிகள் ஓமந்தையில் 24ஆம் திகதி சந்திப்பு?

வவுனியா,ஏப்.22

இலங்கை கடற்படையினர் - கடற்புலிகள் ஆகிய இருதரப்பினதும் கடற்போக்குவரத்து தொடர்பாக இருதரபுப் பிரதிநிதிகளுக்கும் இடையே எதிர்வரும் 24 ஆம் திகதி ஓமந்தையில் சந்திப்பு ஒன்று நடைபெறவிருக்கின்றது. இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் இச்சந்திப்பு நடைபெறும்.

வடக்கு - கிழக்கு கடல் பிரதேசத்தில் இரு தரப்பினரும் மேற்கொளளும் கடல் போக்குவரத்துக்கள் தொடர்பான இரு தரப்பு யோசனைகளும் இச்சந்திப்பில் ஆராயப்படும்.

கடற் போக்குவரத்து குறித்து கடற்புலிகள் தெரிவித்திருக்கும் யோசனைகளும் கடற்படையின் யோசனைகளும் கடந்த 17 ஆம்திகதி கண்காணிப்புக்குழுவிடம் கையளிக்கப்பட்டன.

அண்மையில் முல்லைத்தீவு கடலில் நிகழ்ந்த தாக்குதல் சம்பவத்தையடுத்து கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையே எதிர்காலத்தில் மோதல்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்த யோசனைகளை தெரிவிக்குமாறு இருதரப்பினரையும் கண்காணிப்புக்குழு கோரியிருந்தது.(ம)

## 'புலிகளின் குரல்' விசேட நிகழ்ச்சி

கிளிநொச்சி,ஏப்.22

ஆனையிறவு ஸ்ரீலங்கா படைத்தளம் விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்ட 3ஆம் ஆண்டு நிறைவை யொட்டி புலிகளின்குரல் இன்று விசேட நிகழ்ச்சியினை ஒலிபரப்புச் செய்கின்றது.

இன்று காலை 7 மணிமுதல் இரவு 10.30 மணிவரை இந்த விசேட

(12ஆம் பக்கம் பார்க்க)

## மண்டபம் முகாமில் இருந்துவந்த

# 25 இலங்கை அகதிகள் மன்னார் கடலில் கைது!

மன்னார்,ஏப்.22

இராமேஸ்வரம், மண்டபம் அகதி முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் இலங்கை நோக்கி படகு ஒன்றில் வநத 25 இலங்கை அகதிகளை மன்னார்க் கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்து தலைமன்னார் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலீஸார் அவர்களனைவரையும் நேற்று மன்னார் நீதிவான் எம்.பி. முகைதீன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

அவர்களில் வி.சத்தியதாஸ், வீயோகராஜ் ஆகிய இருவரையும் எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்ட நீதிவான், ஏனையோரை அவர்களது பிரதேச கிராமசேவையாளர்கள் ஊடாக சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கும்படி பணித்தார்.

இந்திய இழுவைப்படகைக் கடத்தி வந்தார்கள் என்ற சந்தேகத்திலேயே இவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம)

# மன்னாரில் கடற்படையினரால் 4 விடுதலைப் புலிகள் கைது!

மன்னார்,ஏப்.22

மன்னார் பேசாலைக் கடலில் விடுதலைப் புலிகள் நால்வரை கடற்படையினர் கைதுசெய்து பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கடற்படையினரின் பாதுகாப்பில் இருக்கும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளில் ஒன்றை பிளாஸ்ரிக் படகில் கட்டி இழுத்துச் சென்றபோதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணிக்குக் கைதுசெய்யப்பட்டவர்கள் என்று கூறப்படும் லோகச்சந்திரன் வாணன்(யாழ்ப்பாணம்), இராமசாமி ஜோசப்(முழங்காவில்), நாகப்பன் அமல்(புதுக்குடியிருப்பு), கோவிந்தராஜ் விமல்(பூநகரி) ஆகிய இந்த நால்வரும் நேற்று மன்னார் நீதிவான் எம்.பி.முகைதீன் முன்னிலையில் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

பிரஸ்தாப நால்வரையும் அநுராதபுரம் அல்லது வவுனியா சிறைச்சாலைகளில் தடுத்துவைப்பது அவர்களுக்கு ஆபத்தானது என்றும் -

எனவே இவர்களை மன்னார்

(12ஆம் பக்கம் பார்க்க)

## உடதலவின்ன படுகொலை வழக்கு:

# சந்தேக நபர்களுக்கு பிணை கோரி உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு

கொழும்பு,ஏப்.22

உடதலவின்ன படுகொலைகள் சம்பந்தமான வழக்கின் சந்தேக நபர்களான லொகான் ரத்வத்தை, சானுக ரத்வத்தை ஆகியோர் உட்பட 14 எதிரிகள் தங்களுக்குப் பிணை கோரி வெவ்வேறு மனுக்களை நேற்று நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளனர்.

கொழும்பு உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறுகோரி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுக்களில் எதிர்மனுதாரராக சட்டமா அதிபர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இவ்வழக்கின் முதலாவது எதிரி

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### கடற்புலிகளின் கடல் நடமாட்ட விவகாரம்:

# கண்காணிப்புக்குழு அறிக்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்த ஜே.வி.பி.தீர்மானம்

கொழும்பு,ஏப்.22

கடற்புலிகள் வடக்கு - கிழக்கு கடற்பிரதேசங்களில் நடமாடும் உரிமையை அரசு ஏற்கவேண்டுமென தெரிவித்துப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுத்திருக்கும் அறிக்கையைக் கண்டித்து ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை ஜே.வி.பி.நடத்தவிருக்கிறது. நேற்று நடந்த ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக ஜே.வி.பி. ஊடகப்பிரிவு தெரிவித்திருப்பதாவது:-

இலங்கை கடற்படையினருக்குச் சமமாக கடற்புலிகளுக்கு கடற்பிரதேசங்களில் சட்டபூர்வமாக நடமாடுவதற்கு அனுமதி வழங்குவது நாட்டின் இறைமைக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகும். ஒரு நாட்டின் கடற்பரப்பில் இரண்டு படைகளுக்கு அனுமதி வழங்குவது நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது என்பதை அங்கீகரிப்பதாகும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு கடற்புலிகளுக்கு கடலில் நடமாட அங்கீகாரம் வழங்கும்படி சிபாரிசு செய்வது தேசத்துரோக நடவடிக்கையாகும். இந்த முடிவுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

- இவ்வாறு ஜே.வி.பி.தெரிவிக்கின்றது.

# பொ.ஐ.மு. நிர்வாகச் சபையும் விசேடமாகக் கூடத் தீர்மானம்

கொழும்பு,ஏப்.22

கடற்புலிகளின் கடல் போக்குவரத்து தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருக்கும் ஒரு யோசனை தொடர்பாக ஆராய பொ.ஐ.முன்னணியின் நிர்வாக சபை விசேடமாகக் கூடவிருக்கிறது.

வடக்கு - கிழக்கு கடலின் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் புலிகள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கும் யோசனை தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து விசேட கூட்டத்தில் ஆராயப்படும் என்று பொ.ஐ.மு. பொதுச்செயலாளர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்திருக்கிறார்.

விசேட கூட்டம் கூட்டப்படும் திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படாதபோதிலும், அக்கூட்டம் குறித்து முன்னணியின் ஏனைய கட்சிகளிடம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தின் பின்னர் அடுத்த நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் அவர் கூறியிருக்கிறார்.

# வல்லுறவுக் குற்றச்சாட்டின் கீழ் இலங்கைத் தமிழருக்குச் சிறை!

## பிரிட்டிஷ் நீதிமன்றம் விதித்தது

கொழும்பு,ஏப்.22

பிரிட்டனில் அகதி அந்தஸ்துக் கோரி விண்ணப்பித்த நிலையில் வாழ்ந்து வந்த இலங்கைத் தமிழரான எஸ்.சிவேந்திரன் (வயது 36). 35 வயதுடைய பிரிட்டிஷ் பெண்ணொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தினால் இவருக்கு 8 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. தண்டனைக் கால முடிவில இந்த நபர் இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளார்.

இத்தகைய குற்றவாளியொருவர் பிரிட்டனுக்கு அவசியமில்லையென நீதிவான் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

மேற்படி நபர் அகதி அந்தஸ்து கோரியிருந்தமையால் அரசினால் இவருக்கு இலவச தங்குமிட வசதி செய்து கொடுக்கப்பட்டிருந்தது.

சம்பவதினம் இரவுவேளையில் கடையொன்றுக்குச் சென்று கொண்டிருந்த பிரிட்டிஷ் பெண்ணை குறிப்பிட்ட நபரும் அவரது நண்பரொருவரும் பயமுறுத்தி பலாத்காரமாகத் தமது அறைக்குக் கூட்டிச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அடுத்த நாள்காலையில் இந்த நபர்களிடமிருந்து தப்பிச் சென்ற குறிப்பிட்ட பெண் பொலீஸில் இதுபற்றி முறைப்பாடு செய்ததை அடுத்து, பொலீஸார் அவர்களைத் தேடிச் சென்ற சமயம் அவர்களிருவரும் தலைமறைவாகி விட்டனர்.

இரண்டு ஆண்டுகளின் பின்னர் லண்டனிலிருந்து நூறு மைல் தொலைவில் உள்ள லெஸ்தர் நகரத்தில் பொலீஸாரால் சிவேந்திரன் கைது செய்யப்பட்டு அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. ஆயினும், அவரது நண்பர்கள் இதுவரையில் பொலீஸாரிடம் சிக்கவில்லை.

# மூதூரில் இராணுவப் பாதுகாப்புடன் பரீட்சை எழுதிய சில தமிழ் மாணவர்கள்

## இறால்குளி அகதிகள் சேனையூருக்கு மாற்றம்

கொழும்பு,ஏப்.22

மூதூரில் இராணுவப் பாதுகாப்புடன் ஒருசில தமிழ் மாணவர்கள் நேற்றுப் பரீட்சை எழுதினர். பீதி காரணமாக வீடுகளில் இருந்த அம்மாணவர்களை இராணுவத்தினர் பரீட்சை நிலையங்களுக்கு அழைத்துச் சென்றனர்.

நாடுமுழுவதும் நேற்று க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஆரம்பமானது. எனினும், மூதூரில் பெரும்பாலான மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்குச் செல்லவில்லை எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் மூதூர் சேனையூருக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், க.துரைரட்ணசிங்கம் ஆகியோரிடம் மூதூர் கிழக்குப் பகுதியில் உள்ள மாணவர்களுக்குத் தனியாக பரீட்சை நிலையம் அமைத்துத் தருமாறு கோரப்பட்டது. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இராணுவம் பாதுகாப்பு வழங்கும் என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டதை அடுத்து அக்கோரிக்கை கைவிடப்பட்டது.

மூதூர் கிழக்குப் பகுதியில் பரீட்சை மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்ட சிலரும் பரீட்சை நிலையங்களுக்கு சமுகமளிக்கவில்லை எனத் தெரிகிறது.

இதற்கிடையே, இறால்குளி முகாமில் தங்கியிருந்த 500 தமிழ் அகதிகள் நேற்று சேனையூர் மத்திய மகா வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டனர்.

மூதூர் மெதடிஸ்ட் ஆலயம், கத்தோலிக்க ஆலயங்கள் ஆகியவற்றின் மதகுருமாகளும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிவாரணப் பணிகள் தொடர்பாக கிராமசேவையாளர்களைச் சந்தித்து ஆராய்ந்தனர். விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திலக்கும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டார்.

# நுவரெலியா பொலீஸ் - அரசியல்வாதி மோதல் குறித்து விசேட விசாரணை

## சம்பந்தப்பட்டவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்

கொழும்பு,ஏப்.22

நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் ஆளும்கட்சி கொழும்பு மாவட்ட அரசியல்வாதி ஒருவரும் பொலீஸாரும் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவம் குறித்து விசேட பொலீஸ் குழு ஒன்று விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறது. பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவின் பணிப்பின் பேரில் நுவரெலியா வந்த அனுப்பப்பட்ட பொலீஸ் குழுவே விசாரணைகளை நடத்துகிறது.

இச்சம்பவம் குறித்து இரு தரப்பு வாக்கு மூலங்களையும் பதிவு செய்யுமாறு விசேட பொலீஸ்குழு பணிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் நுவரெலியாவில் நடைபெற்ற மோட்டார் ஓட்டப் போட்டியின்போது குறிப்பிட்ட அரசியல்வாதியும் அவரது சகாக்களும் கடமையில் இருந்த போக்குவரத்துப் பொலீஸாரையும், போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரியையும் தாக்கினர் எனக் கூறப்படுகிறது. பொறுப்பதிகாரியும் இரண்டு பொலீஸாரும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, சம்பந்தப்பட்ட அரசியல்வாதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். வைத்தியசாலையின் இருதய சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கும் அவரது நோய் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. நேற்று அதிகாலை அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# மாகாண கல்வித் திணைக்கள மோசடி; பிரதிக் கல்விப் பணிப்பாளர் கைது!

மத்திய மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு குற்றப்புலனாய்வுப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்றிருக்கும் 10கோடி ரூபா மோசடியில் சம்பந்தப் பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே அவர் கைதானார். கண்டி பிரதம நீதிவான் லியோன் செனவிரத்ன முன்னிலையில் குற்றப்புலனாய்வுப் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்ட அவர், நாளை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நிதி மோசடியில் சந்தேக நபர் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன என்று குற்றப்புலனாய்வுப் பொலீஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்திருக்கின்றனர்.

### எமது சமுதாயத்தை சீரழிக்கும்

# சமூக விரோதிகளின் செயல்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது

## நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா எச்சரிக்கை



யாழ்ப்பாணம்,ஏப்.22

எமது சமுதாயத்தில் ஊடுருவி சட்டத்தையும், ஒழுங்கையும் சீர்குலைக்க முனையும் சமூக விரோதிகளை நாம் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கிறோம். அவர்களின் செயல்களை நாம் ஒருபோதும் அனுமதிக்கமுடியாது.

- இவ்வாறு தெரிவித்தார், தமிழழ நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா.

கடந்த சனியன்று இரவு நல்லூர் ஆலய வடக்கு வீதியில் இடம்பெற்ற தியாகச்சுடர் அன்னை பூபதியின் 15 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ்வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற மாலை நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது:-

அன்னை பூபதி, 15 ஆண்டுகளுக்கு முன்னர் உண்ணாவிரதமிருந்த சூழல், இன்றைய நிலைக்கு முற்றிலும் மாறுபட்டது. சர்வதேச அரங்கிலே அஹிம்சையைப் போதித்தவர்களின் முகத்திரை கிழித்தெறியப்பட்டது. எமது மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் எத்தனையோ தியாகங்கள் இங்கே இடம்பெற்றுள்ளன.

இன்றைய சூழலில் நாம் ஒரு மாயையில் அகப்பட்டுள்ளோம். எமது கடந்தகால வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது அது தெளிவாகும். இன்றைய புரிந்துணர்வு உடன்படிக்கை போன்ற எத்தனையோ ஒப்பந்தங்களைத் தாண்டி வந்ததே எமது போராட்டம். ஆயினும், இன்றைய உடன்படிக்கையில் சர்வதேச மத்தியஸதம் காணப்படுகிறது. எவ்வாறாயினும், ஒப்பந்தத்தில் கூறப்பட்ட பல விடயங்கள் இன்னும்கூட பூரணமாக அமுல்படுத்தப்பட்டதாக இல்லை. குறிப்பாக எமது மக்களின் இயல்புவாழ்க்கை இதுவரை திரும்பவேயில்லை. அவ்வப்போது ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற பிரச்சினைகள் அனைத்துக்கும் காரணம் புரிந்துணர்வு உடன்படிக்கை பூரணமாக அமுல்படுத்தப்படாமையே ஆகும்.

சிங்கள மக்களின் 70 சதவீதத்துக்கும் அதிகமானோர் குறைந்த பட்சம் சமஷ்டித் தீர்வைக்கூட தமிழர்களுக்கு வழங்கக்கூடாது எனத் தெரிவித்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோருக்கு தமிழ்மக்களின் பிரச்சினை என்ன? அவர்கள் ஏன் போராடுகிறார்கள்? எவ்வளவு காலமாக இந்தப் போராட்டம் இடம்பெறுகிறது? போன்ற எதுவுமே தெரியாது. பேரினவாதம் அங்கு தலைவிரித்தாடுகிறது.

எமது மக்கள் வரி போன்ற சில அழுத்தங்களை எதிர்கொள்வதை நாம் அறிவோம். எமது தேசிய விடுதலைப் போராட்டம் வீறுநடை போட்டுக் கொண்டிருப்பதற்கு எமது மக்களின் பேராதரவே காரணம். போராட்டம் உயரிய நிலை ஒன்றை அடையும் போது இத்தகைய அழுத்தங்கள் எமது மக்களைவிட்டு நிச்சயம் அகலும். இவ்வாறு பரா தெரிவித்தார்.

நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி மற்றும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரும் உரையாற்றினர்.

நிகழ்வின் இறுதியில் நவாலியூர் கலாபூஷணம் செல்லத்துரை நாடகக் குழுவினர் வழங்கிய நாடகம் மற்றும் அருணா இசைக்குழுவின் இன்னிசை கானங்கள் என்பனவும் இடம்பெற்றன. (எ-9)

## திருமலைக்கு மேலும் உலர் உணவுப் பொருள்கள்

மூதூரில் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு வழங்கவென உலக உணவுத் திட்டத்தின்கீழ் 32 லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் திருகோணமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியேற்றல் அமைச்சு அனுப்பிவைத்துள்ள 54 லட்ச ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களுக்கு மேலதிகமாகவே இப்பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

உலக உணவுத் திட்டத்தின்கீழ் திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு நேற்று நான்கு லொறிகளில் உலர் உணவுப் பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. மேலும் ஆறு லொறிகளில் உலர் உணவுப் பொருள்கள் வந்துசேரவேண்டியிருப்பதாக திருமலை கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

# நயினை நாகதீப தேரரின் உடல் நேற்று தீயுடன் சங்கமம்



கொழும்பு கடற்படை ஆஸ்பத்திரியில் கடந்த 15ஆம் திகதி மரணமான நயினாதீவு நாகதீப விகாராதிபதி பிராக்மனவத்தே தர்மகீர்த்தி நாயக தேரோவின் (வயது88) இறுதிக்கிரியைகள் பூரண அரச மரியாதையுடன் நேற்று நயினாதீவில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அனுதாபச் செய்தியை எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செய்தியை மின்வலு மின்சக்தி அமைச்சர் கருஜய சூரியவும் வாசித்தனர். அமைச்சர்களான டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார, காமினி லொக்குகே, ஜயலத் ஜயவர்த்தன மற்றும் தி.மகேஸ்வரன் ஆகியோருடன் முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசியும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்.

கடற்படைத் தளபதி தயா சந்தகிரி, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, வடபிராந்தி சிரேஷ்ட பொலீமா அதிபர் ஹரல் அன்ரனி மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் ஆகியோரும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டிருந்தனர். பெரும் எண்ணிக்கையான புத்த பிக்குகள், கிறிஸ்தவ, முஸ்லிம் மற்றும் இந்து மதத் தலைவர்களும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

கடற்படையிருடன் பொலீஸாரும், இராணுவத்தினரும் பெரும் எண்ணிக்கையில கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். நாகதீப விகாரைக்கு அருகில் உள்ள மைதானத்தில் விசேடமாக வடிவமைக்கப்பட்டிருந்த சிதையில் வைக்கப்பட்ட தேரரின் பூதவுடல் மாலை 3.30 மணியளவில் அக்கினியுடன் சங்கமமானது.

(படம்: ரமணன்)

ராணுவச் சமநிலையை பேணவேண்டும்.

அங்கவீனமானோரை பராமரிக்கிறோம்.

மாவீரர் குடும்பங்களுக்கு உதவுவது அவசியம்.

# வரியை இப்போது முற்றாக நிறுத்த முடியாது: ஆனால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது!

## பல்கலைக்கழகத்தில் பாலகுமாரன் விளக்கவுரை

யாழ்ப்பாணம்,ஏப்.22

நாம் வரி அறவிடுவதை இப்போது முற்றாக நிறுத்த முடியாது. ஆனால், வரியைக் குறைப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். எமது தலைமையினால இதற்கான பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு நேற்று யாழ்பல்கலைகழகத்தில் நடைபெற்ற 'சமகால அரசியல் நிலைமைகள்' குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் வே.பாலகுமாரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

'நாம் தற்போது மக்களிடம் மேற்கொண்டுவரும் வரி அறவீடுகளை உடனடியாக நிறுத்த முடியாது அதனைக் குறைப்பதற்கான முயற்சிகளை எடுத்துவருகிறோம். எமது தலைமையும் அதற்கான பணிப்புரையை எமக்கு வழங்கியுள்ளது. ஓர் இடைக்கால நிர்வாகம் கிடைக்கும் போதோ அல்லது எமது இயக்கம் ஒரு நிதிவளம் உள்ள தாகமாறும் போதோ நாம் வரியை முற்றாக நிறுத்தி விட முடியும். அது வரைகாலமும் எமது இராணுவச் சமநிலையைப் பேணுவதற்கும், போரில் அங்கவீனமான எமது போராளிகளைப் பராமரிப்பதற்கும் உங்களுக்காக தமது உயிரை ஈந்த மாவீரர்களின் குடும்பங்களின் எதிர்கால வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கும் நிதி முக்கியமானது. அதற்காகவே வரி அறவிடுகின்றோம். மேற்படி எமது தேவைகளை மேற்கொள்ள எமக்கு ஏற்படும் செலவு கணக்கிட்டுவிட முடியாதது; எண்ணில் அடங்காதது.

இதனை எமது மக்கள் தெளிவாக விளங்கிக்கொள்ளவேண்டும்; புலிகள் எதற்காக வரி அறவீடு செய்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

### கட்டுப்பாட்டுடன் வாழும் போராளிகள்

எமது போராளிகளுள் அநேகமானவர்கள் வயதில் கூடியவர்களாக உள்ளனர். அவர்கள் தமது மன உளைச்சல்களை - ஆசைகளை - கட்டுப்படுத்தியுள்ளனர்.

இங்குள்ளவர்கள் என்றால் சுதந்திரமாக விசிலடிக்க, பிடிக்கைக்க, களகுடிக்க முடியும் ஆனால், எமது போராளிகள் அப்படிச் செய்ய முடியாது. ஏனெனில், எமது இயக்கம் ஒரு கட்டுக்கோப்பு மிக்க இயக்கம் என்பது அனைவருக்கும் தெரியும்.

'பணிந்து போதல், துணிந்து போராடுதல்' என்ற இரு நிலைகளில் நாம் துணிந்து போராடுவதற்கு முன் வந்தோம். அதனால், தனியோர் இனமாக எமது அபிலாஷைகளை வென்றெடுக்க இன்று முயன்று வருகின்றோம். மறந்து போனவற்றை ஞாபகப் படுத்துவதுதான் விடுதலைப் போராட்டம். நாம் மறந்து போனவற்றை மீண்டும் பெறுவதற்குத்தான் விடுதலைப் போராட்டத்தை நடத்தினோம். அதன் உச்சக்கட்டத்தில் இன்று நின்று கொண்டிருக்கிறோம்.

ஓர் இடத்தில் போர் நடக்கும் போது பாடசாலையும் பல்கலைக்கழகமும் ஒழுங்காக நடைபெற்றதில்லை. ஆனால், யாழ்ப்பாணத்திற்கு அந்த பெருமையான வரலாறு உண்டு. போராட்டம் நடந்தபோதும் கல்வியும் முன்னெடுக்கப்பட்டது. எமது மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சகல செயற்பாடுகளிலும் பல்கலைகழகம் செல்வாக்குச் செலுத்த வேண்டும்; அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இன்று நாம் ஒரு தீர்க்கமான கால



கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் அதை நாம் சரியாகக் கையாள வேண்டிய நிலையில் உள்ளோம் எமது உரிமைப் போராட்டத்தில் அனைவருக்கும் பங்கு உண்டு. அது டக்ளஸாக இருந்தாலும் சரி மகேஸ்வரனாக இருந்தாலும் சரி. சமாதான முயற்சிகளில் அக்கறையுள்ளவர்களாக உள்ள நாம், எமது தேசிய பாதுகாப்பிலும் அக்கறையுள்ளவர்களாக இருக்கிறோம். எமக்கு எமது தேசிய பாதுகாப்பும் முக்கியமானது. அதற்காக எம்மிடம் தேசிய பாதுகாப்புப் படையணியொன்றும் தயார் நிலையில் உள்ளது. அதனுடைய விரல் நுனி சுடுகலன் விசையில் தயாராக உள்ளது. எனினும், மீண்டும் ஒரு யுத்தத்தை நாம் விரும்பவில்லை. சமாதானமான முறையில் எமது பிரச்சினையைத் தீர்க்கவே நாம் விரும்புகிறோம்.

### கொடுத்த விலை அதிகம்

எமது இராணுவ மேல் நிலையை அடைவதற்கு நாம் கொடுத்த விலை அதிகம். வெற்றியின் விளிம்பில் நிற்கும் ஓர் இயக்கம் தோல்விகளுக்கும் வெற்றிகளுக்குமான காரணங்களை உணரவேண்டும். அவற்றை சரியாக உணர்ந்துள்ளோம். பாரிய உலக சூழகத்திற்குள் சுழியோடி அடிபட்டு எமது பணிகளை திறம்பட மேற்கொண்டு வருகின்றோம்.

சிறுபான்மைக்குள் சிறுபான்மையான புலிகளை அங்கீகரிப்பதற்கு மேற்குலகம் தயாராகி வருகின்றது என இப்போது தென்னிலங்கையில் விமர்சனங்கள் எழுந்துள்ளன. பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் உட்பட பல நாடுகள் புலிகளோடு உறவு வைப்பது தான் சரியானதென்று இப்போது தீர்மானித்துள்ளன. புலிகளோடு உறவு வைப்பதுதான் தெற்காசியச் சமநிலையைப் பேணுவதற்கான சரியான வழி என்பதையும் பல நாடுகள் இப்போது நன்கு உணர்ந்துள்ளன.

### இந்தியாவை பகைக்கவில்லை

நாம் இந்தியாவையும் பகைக்க விரும்பவில்லை. இந்தியாவின் பங்களிப்புடன் ஒரு தீர்வைப் பெறுவதைத் தான் நாம் விரும்புகிறோம். ஆனால், இந்தியா இதில் அக்கறைகாட்டுவதாகத் தெரியவில்லை. புலிகள் மீதான இந்தியாவினது கோபம் தவிர்க்க முடியாதது. அதற்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர். ஆனால், இந்தியாவின் பங்களிப்பைப் பெறுவதற்கு நாம் முயல்கிறோம்.

எமது இயக்கமும் தவறை விட்டிருக்கிறது. தவறைத் திருத்தியுள்ளது. இப்போதும் தவறை விட்டுக்கொண்டிருக்கிறது. அதையும் திருத்த முயன்று கொண்டிருக்கிறது. ஈராக் மீதான அமெரிக்க யுத்தமும் எமக்கு ஒரு பாடம்.

எனவே, மக்களாகிய நீங்கள் எமது தவறுகளைச் சுட்டிக்காட்டினால் அதைத் திருத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம் - என்றார் அவர்.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன் (சுதா), 'ஈழநாதம்' நிர்வாக இயக்குநர் பாபா ஆகியோரும் பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலின்போது பல்கலைக்கழக மாணவர்களினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு விடுதலைப் புலிகளின் பிரமுகர் வே.பாலகுமாரன், அரசியல்துறைத துணைப் பொறுப்பாளர் தங்கன் ஆகியோர் பதிலளித்தனர். (ஒ-8)

கழிப்பறை மூடியாக, வீதிக்குத் தாராக

# அரசிடமிருந்து கிடைக்கும் உதவிகளை டக்ளஸோ, மகேஸ்வரனோ வழங்கட்டும்

## அதற்கு நாம் தடையில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.22

அரசிடமிருந்து எமது மக்களுக்கு கிடைக்க வேண்டியவற்றை கழிப்பறை மூடியாக அல்லது வீதித் தாராக டக்ளஸோ, மகேஸ்வரனோ வழங்கட்டும். அதற்கு நாம் தடையாக இருக்கவில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் பிரமுகர் பாலகுமாரன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்திடம் இருந்து எமது மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகளை கழிப்பறை மூடிகளாவோ, வீதித் தாராகவோ வேறு பொருள்களாகவோ யாராவது கொடுக்க முனைவந்தால் அதற்கு நாம் தடையில்லை. அது எமது மக்களுக்குச் சேர வேண்டிய சொத்து. இதைத்தான் அமைச்சர் மகேஸ்வரனுக்கும், எனது பழைய நண்பர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் சொல்லிவைக்க விரும்புகிறேன்.

அமைச்சர் மகேஸ்வரனாக இருந்தாலும் சரி டக்ளஸ் தேவானந்தாவாக இருந்தாலும் சரி எமது மக்களுக்கு அரசிடமிருந்து கிடைக்க வேண்டிய உதவிகளைப் பெற்று வழங்கினால் நாம் அதற்கு தடையாக இருக்கப் போவதில்லை. அதற்காக வரும் விளம்பரங்களைப் பாருங்கள், எல்லாம் ஒன்றுதான். அதில், தலையும் பெயரும்தான் வேறு. 'உதயனு'க்கும் அதைவிட்டால் வேறு ஒன்றும் இல்லை.

'சும்மா கிடந்த இரும்பை எடுத்து நீட்டி நிமிர்த்தி சூடாக்கி அதை தோளில் சுமந்து கொண்டு போகிறார் யாழ்ப்பாணத்தார்' என்று எனது பழைய நண்பர் டக்ளஸ் தேவானந்தா கூட அண்மையில் ஒரு துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். நான் அவரைத் தூற்றவில்லை. "நாங்கள் (ஈ.பி.டி.பியினர்) முன்னர் கேட்டதைத் தானே இவர்கள் (புலிகள்) இப்போது கேட்கிறார்கள்" என்றும் அவர் சொல்கிறார். அது உண்மைதான். அதனை நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், ஒன்றைமட்டும் சொல்கிறேன். சுதந்திரமான முறையில் ஜனநாயக வழியில் எவரும் இங்கு அரசியலில் ஈடுபட முடியும். ஆனால், எதிரியுடன் கைகோத்து நிற்கக் கூடாது. எதிரி இன்னும் எமது மண்ணில் இருந்து வெளியேறவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

இங்குள்ள படையினருக்கும் நான் ஒன்றைச் சொல்லி வைக்க விரும்புகிறேன். நீங்களும் (படையினரும்) உங்களுடைய வீடுகளுக்கு போய் விட்டீர்கள் என்றால் நாங்களும் எங்கள் வீடுகளுக்குப் போய் சுதந்திரமாக வாழலாம். நீங்களும் சுதந்திரமாக வாழலாம். உங்களுக்கும் பிரச்சினையில்லை. சிங்கள மக்களும் நன்கு சிந்திக்கச் செயலாற்றத் தெரிந்தவர்கள். அதனால்தான் நான் இதைக் கூறுகின்றேன் - என்றார் அவர். (ஒ-8)

# நெடுமாறனின் பிணைமனு நீதிமன்றத்தால் நிராகரிப்பு

தமிழகத்தின் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாக 'பொடா' சட்டத்தின் கீழ் கடந்த ஓகஸ்ட் மாதம் கைதுசெய்யப்பட்டு

உலக அரங்கில்

சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கில் நெடுமாறனுக்குப் பிணை வழங்கவேண்டும் என்றுகோரி அவரது சட்டத்தரணிகள் பூந்தமல்லி 'பொடா' நீதிமன்றத்தில் மனு தாக்கல்செய்து இருந்தனர். இந்த பிணை மனு மீதான விசாரணை நேற்று நடந்தது.

பழ.நெடுமாறன் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பயங்கரமானவை. அவருக்கு பிணை வழங்கப்பட்டால் சாட்சியங்களை குழப்பிவிடுவார் என்று அரசுத்தரப்பு சட்டத்தரணி கூறினார். நீதிபதி இதை ஏற்று பழ. நெடுமாறனின் பிணை மனுவை தள்ளுபடி செய்தார்.

பழ. நெடுமாறனோடு 'பொடா' சட்டத்தில் கைதாகியுள்ள பரந்தாமன், சுப. வீரபாண்டியன், பாவணன், சாகுல அமீது, தாயப்பன் ஆகியோரது பிணை மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன. (ஒ)

# கருணாநிதி - வைகோ சந்திப்பு

வேலூர்,ஏப்.22

தமிழகத்தில் தி.மு.க தலைவர் கருணாநிதி நேற்றுக் காலை 10 மணிக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவை சந்தித்துப் பேச வேலூர் சிறைக்குச் சென்றார்.

அவருடன் மனைவி தயாளு அம்மாளும் சென்றார். அவர்கள் வைகோவைச் சந்தித்து 30 நிமிடங்கள் பேசினார்கள். பின்னர் 10.30 மணிக்கு சிறையில் இருந்து கருணாநிதி வெளியே வந்தார்.

வைகோவிடம் குடும்ப நலம் பற்றி விசாரித்ததாகவும், அவர் தனது குடும்ப நலம் பற்றி விசாரித்ததாகவும கருணாநிதி தெரிவித்தார். வைகோ பிணையில் வெளியே வருவதாக இல்லை. உயர் நீதிமன்றத்தில் இது தொடர்பாக வழக்கு உள்ளது. தீர்ப்பை எதிர்பார்க்கின்றார். அங்கு தனக்கு நீதி கிடைக்கும் என்று அவரும் நம்புகிறார். நானும் நம்புகிறேன் என்று கருணாநிதி தெரிவித்தார். (ஒ)

# சதாமின் சகா கைது; மருமகன் சரண்!

பக்தாத்,ஏப்.22

சதாம் ஹுசைனின் அமைச்சரவையில் உயர்கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சித்துறை அமைச்சராகப்




பதவி வகித்த அப்த் அல்காலிக் அப்த அல் காவர் அமெரிக்கப்படையினரிடம் பிடிபட்டார். இதேவேளை, சதாமின் மருமகனான ஜமால் முஸ்தபா சுல்தான் அமெரிக்கப் படையினரிடம் சரணடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்கா தேடிவரும் சதாம் மற்றும் அவரது சகாக்களின் 55 பெயர்கள் அடங்கிய பட்டியலில் 54 ஆவது இடத்தில் அல் காவர் இருந்தார்.

ஈராக்கில் அமெரிக்கப் படையினர் நடத்திய தேடுதலில் அல் காவர் சிக்கிக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சதாமின் இளைய மகளின் கணவரான ஜமால் அமெரிக்கப் படையினரிடம் சரணடைந்தார் இவர் சிரியாவில் தங்கியிருந்ததாகவும் -

அங்கிருந்து பக்தாத் வந்து சரணடைந்ததாகவும் -

ஈராக்கிய எதிர்க்கட்சியான ஈராக் தேசிய காங்கிரஸின் தலைவர் சலாபி தெரிவித்தார். சதாமுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக சிரியாவில் இவர் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது. சதாமுடன் தொடர்பைத துண்டித்திருந்த போதும், அவரது குடும்ப உறுப்பினர் என்ற வகையில் அமெரிக்காவால் தேடப்படுவோர் பட்டியலில் 40 ஆவது இடத்தில் இவர் இருந்தார். ஆயினும், இவர் அமெரிக்கப் படையினரிடம் சரணடைந்தால் நல்ல எதிர்காலம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்தே இவர் சரணடைந்ததாக சலாபி மேலும் தெரிவித்தார். சதாமின் மூத்த மகளின் கணவரும் சதாமுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



ஈராக்கின் பக்தாத் நகர வீடுகளில் புகுந்து சூறையாடல் மற்றும் வல்லுறவு சம்பவங்களில் சட்ட விரோதிகள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள அமிதாபாரில் என்ற பெண் தனது மகள் மற்றும் சகோதரியுடன் துப்பாக்கி ஏந்தியபடி வாசலில் காவல் நிற்கும் காட்சி.

இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், வீரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத் தளாசசி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்குப் பாவியுங்கள்!

✻ 100% இளமையையும் வலிமையையும் தரும்!

**சித்தாரா முடக்கத்தான் அழுக்கரா சிரப்**

*MANUFACTURED BY:*
*SITHARA PRODUCTS,*
*PUTTALAM ROAD,*
*(REG. NO: 6382) AR/PR/NO 228*

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P: 222 2567

(C-27204)

# முன்பள்ளி ஆசிரியர் நலன்கள் உரியவாறு பேணப்படவேண்டும்

## விளையாட்டுவிழாவில் ஞானோதயா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.22

முன்பள்ளி ஆசிரியர்களின் நலன்கள் உரியமுறையில் பேணப்படவேண்டும்.

- இவ்வாறு முன்பள்ளி ஆசிரியர்களின் நலன் பேணப்பட்டால் மட்டுமே அவர்களிடமிருந்து உரிய சேவையைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் நல்லூர் ஞானோதயா வித்தியாலய அதிபர் சு. இராசலிங்கம்.

புதிய செம்மணி வீதியில் உள்ள ஞானவைரவர் கோயிலடி ஞானஒளி சனசமூகநிலைய முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுநிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இருபாலை தெற்கு கிராம உத்தியோகத்தர் எஸ்.நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களின் அடிப்படையான ஆரம்பகால கல்வி வளர்ச்சிக்கு உரமூட்டுபவர்கள் முன்பள்ளி ஆசிரியர்களே. முன்பள்ளிகளுக்கான சலுகைகளை வழங்கும் அரசு, முன்பள்ளி ஆசிரியர்களின் விவகாரத்தில் பாராமுகமாகவே உள்ளது. இத்தகைய செயற்பாடுகள் காரணமாக முன்பள்ளி ஆசிரியர்களின் மனநிலை பாதிக்கப்படும் நிலையே உள்ளது.

இந்த நிலையினைக் கருத்திற்கொண்டு முன்பள்ளி ஆசிரியர்களின் நலங்களைப்பேண அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்கள் குறைந்த ஊக்குவிப்புப் பணத்துடனேயே திறம்பட சேவையாற்றி வருகின்றனர். எனினும், இந்த ஊக்குவிப்புப் பணமும் தற்போதைய அரசினால் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், மேற்படி ஆசிரியர்கள் எந்தவொரு வேதனமும் இன்றியே சேவையாற்றவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், கிராமத்தில் உள்ள அனைவரினதும் உதவியை நாடவேண்டியநிலை உருவாகியுள்ளது.

குறிப்பாக, கிராமப்புறங்களில் உள்ள முன்பள்ளிகளின் வளர்ச்சிக்கு அனைவரும் உதவிசெய்ய முன்வரவேண்டும்.

வசதியுள்ள இடங்களிலுள்ள முன்பள்ளிகளுக்கு மேன்மேலும் உதவிகள் வழங்கும் நிலையும் காணப்படுகின்றது. இது கவலைக்குரிய விடயம் ஆகும் - என்றார்.(எ-180)

## நீங்காத நினைவில் 31 ஆம் நாள் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

*மண்ணுலகில்*
*19 – 09 – 1945*



*விண்ணுலகில்*
*25 – 03 – 2003*

### அமரர் குமாரசாமி தம்பிஐயா

**வையத்தில் வழிகாட்டி**
**வாழவைத்த தெய்வமே! – இன்னும்**
**சில காலம் எம்முடன்**
**வாழ்ந்திருக்கக் கூடாதா?**

**25-03-2003 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தந்தையாரின் நினைவாக நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், நாளை (23-04-2003) புதன்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**அன்னாரின் திடீர் மறைவுச்செய்திகேட்டு ஓடோடி வந்து சகல வழிகளிலும் உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கியவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பிவைத்த சகலருக்கும் நாம் நன்றி நவில்கின்றோம்.**

*சந்தை ஒழுங்கை,*
*கொடிகாமம்.*

(16826)

**- குடும்பத்தினர்.**

## ஓராண்டு நினைவில்.....

**மண்ணில்**
**1938 - 10 - 26**



**விண்ணில்**
**2002 - 05 - 02**

**வேலணை மேற்கு**

### திருமதி சிவராசா பத்மாவதி

திதி:- சித்திரை மாத அபரபக்க சஷ்டி

**சீரோங்கு வேலணை மேற்கூர்ப் பதியில்**
**அவதரித்து; அன்புசேர் பண்பாலும் நல்லுழைப்பாலும்**
**பேரோங்க வாழ்ந்தவளே; அம்மா நீ**
**போனபின்னர் அத்தனையும் போனதே காண்**
**ஊரோங்க உழைத்தவளே; "பத்மாவதிப்"**
**பெரியவளே; மாலையிட்ட மன்னனும் வாடிநிற்க**
**வேரோங்கப் பெற்றெடுத்த பிள்ளைகளோடு**
**பேரர்களும் நின் சோதரரும் துயரத்தில் ஏங்கி நிற்க**
**ஓராண்டு போனதென்னே! துயரமது**
**ஆறல்லயே நெஞ்சம் மறக்குமா நின்நினைவை?**

*266, அரசடி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

(17002)

**- குடும்பத்தினர்.**

**சுடர் ஒளி**

**27.04.2003 இதழில்**

**விலை 14/=**




- இராணுவ அரசியல் மாற்றங்களுக்கு வித்திட்ட ஆனையிறவு பெரும் சமர்.
- அமைதிக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் மூதூர் புத்தளம் சம்பவங்கள்.
- மட்டக்களப்பை கலக்கும் குழுக்கள் கொட்டமடக்கிய மகிழ்வில் மக்கள்.
- மதத்தை கேடயமாக்கி குற்றங்கள் மக்களின் மனங்களில் ஏக்கங்கள். - (தேடி)
- நக்கீரன் ஆசிரியர் கோபால் மீது ஜெயலலிதா 'பொடா' பாய்ச்சல்
- தலை தப்பியது. - (நகைச்சுவை விருந்து )
- சதாம் ஹுசைன் எங்கே? மண்டையை பிசைகிறார் புஷ்

மற்றும் பித்தன் பதில்கள், சினிமா, இணையத்தளங்களிலிருந்து, மசாலா மிக்ஸ், விளையாட்டு, கலையமுதம் உட்பட பல்வேறு சுவையான அம்சங்கள்.

(C/27496)

உதயன்

## அத்துமீறி நடக்கும் ஆளும் கட்சியினர்

ஆளுங்கட்சி எம்.பிக்களின் அட்டகாசங்கள் குறித்துத் தொடர்ந்து தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

தமது சொந்த இடங்களிலும் அரச அலுவல கங்களிலும் அடாவடித்தனம் பண்ணி ஆள்களை மிரட்டி வந்தோர், இப்போது பொலீஸாரையும் பொலீஸ் நிலையங்களையும் தாக்கும் அளவுக் குக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றார்கள்.

நேற்றுமுன்தினம் நுவரெலியாவில் போக்குவரத் துப்பிரிவு பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், அப்பிரி வின் பொறுப்பதிகாரி ஒருவரும் பட்டப்பகலில் - நட்டநடு வீதியில் - பொதுமக்கள் பார்த்திருக்க - ஆளுங்கட்சி எம்.பி. ஒருவரினால் தாக்கப்பட்டிருக் கின்றனர். இருவரும் நுவரெலியா ஆதார வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஆளுங்கட்சி அரசியல்வாதி ஒருவரின் இந்த அத்துமீறலை நேரில் பார்த்த பொதுமக்களில் - பத்துக்கும் அதிகமானோர் - பொலீஸாரிடம் அச் சம்பவம் குறித்து வாக்குமூலமளித்திருக்கின்றனர்.

அண்மைக்காலத்தில் ஆளும்கட்சி எம்.பிக்களி னால் பொலீஸார் தாக்கப்பட்டிருப்பது இது முதல் தடவையல்ல.

கம்பஹா மாவட்டத்திலும் ஆளும் கட்சி எம்.பி. ஒருவர் தமது ஆதரவாளர்களுடனும் குண்டர் குழு ஒன்றுடனும் அண்மையில் சீதுவ பொலீஸ் நிலையத்துக்குள் புகுந்தார். விபத்துச் சம்பவம் ஒன்று தொடர்பாக அங்கு தடுத்து வைக்கப்பட்டி ருந்த ஒருவரை அதிரடியாக மீட்டுச் சென்றார்.

இதேபோன்று, துர்நடத்தை தொடர்பாக வென்னப்புவ பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் ஐந்து யுவதி களை ஆளுங்கட்சியின் புத்தளம் மாவட்ட எம்.பி. ஒருவர் அதிரடி நடவடிக்கையாக மீட்க முயற்சித் தார் எனக் கூறப்படுகின்றது.

தனியார் பஸ் ஒன்றின் மீது நடத்தப்பட்டதா கக் கூறப்படும் தாக்குதல் தொடர்பாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவரை உடனடியாக விடுவிக்காவிட்டால் கஹகவத்தை பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரியைக் கொல்லப் போவதாக மிரட்டியிருக்கிறார் ஆளுங்கட்சி பிரதேச சபை உறுப்பினர் ஒருவர். அவரது அச்சுறுத்த லில் இருந்து தப்புவதற்காக சம்பந்தப்பட்ட பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அந்த பிரதேச சபை உறுப்பினரைச் சுட்டுக் காயப்படுத்த வேண்டி யிருந்தது.

இவை அண்மைக் காலத்தில் இடம்பெற்ற சில அத்துமீறல்கள்.

இலங்கைப் பொலீஸார் நீதியானவர்கள், நேர்மையானவர்கள், சட்டப்படி செயற்படுபவர்கள் என்று சான்றிதழ் கொடுப்பதல்ல எமது நோக்கம்.

பொலீஸார் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்களைத் தாக்கி, அச்சுறுத்தி, மிரட்டி தாம் விரும்பி யதை நிறைவேற்றும் போக்கில் செயற்படுவதற்கு ஆளுங்கட்சியினர் தலைப்பட்டுள்ளனர் என்ப தைச் சுட்டிக்காட்டுவது அவசியமானதாகின்றது.

ஆளுங்கட்சியினர் சட்டவிரோத நடவடிக்கை களில் ஈடுபட்டனர் என்ற விடயத்தில் குற்றவாளி களாகக் காணப்பட்டால் அவர்களுக்கு எதிராக உரிய - கடுமையான - ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென ஐ.தே.கட்சி பொதுச் செயலா ளர் செனரத் கப்புகொட்டுவ - உறுதியளித்திருக் கின்றார்.

இத்தகைய சம்பவங்கள் குறித்து பொலீஸார் புலனாய்வு நடத்தி, நீதிமன்ற விசாரணைகள் முடிவுற்று, தீர்ப்பு வழங்கப்படும் வரை கட்சி தனது நடவடிக்கைக்குக் காத்திருக்கத் தேவையில்லை.

நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற் றது போன்ற பகிரங்கச் சம்பவங்கள் குறித்து தீர்க்கமான முடிவொன்றை எடுப்பது - அதுவும் குக்கிராமங்கள் வரை தனது செயற்பாட்டெ பர வலாக்கியுள்ள ஆளும் கட்சிக்கு அவ்வளவு ஒன் றும் கஷ்டமான காரியமல்ல.

எனவே, இதுவிடயத்தில் ஆளுங்கட்சியின் நடவ டிக்கை உறுதியானதாக - கடுமையானதாக - இருக்கும் என்பதை ஆளும் கட்சியின் ஏனைய உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெளிவு படுத்துவது அவசியம் என்று ஆளுங்கட்சி கருது மானால் தனது நடவடிக்கைகளை - தாமதமின்றி - மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவது கட்டாயம் ஆகும்.

வாய்ச்சொல் வீரர்களான கட்சி நிர்வாகிகள் தங்கள் செயற்றிறனையும் நிரூபிப்பார்களா?

## பண்ணைத் தாம்போதியில் உள்ள பாலத்தைத் திருத்தக் கோரிக்கை

### பயணிகள், சாரதிகள் விடுத்துள்ளனர்

மண்டைதீவு,ஏப்.22

யாழ்ப்பாணம் பண்ணை வீதியில் அமைந்துள்ள பாலம் மிக மோசமாக சேதமடைந்துள்ளது. இந்தப் பாலம் எந்த நேரத்திலும ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நிலையில் இருப்பதாக இந்தப் பாலத்தின் ஊடாக பயணிப்பவர்களும் வாகன சாரதிகளும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இதுவரை அமைக்கப்பட்ட இரண்டு தொங்கு பாலங்களில் உறுதியான பாலமாக இது ஆரம்பத்தில் கருதப்பட்டது.

கோட்டை படையெடுப்பின் பொழுது குண்டு வைத்துத் தகர்க் கப்பட்ட இந்தப் பாலம் தற்காலிகமாகச் சீர்செய்யப்பட்டது.

1996ஆம் ஆண்டின் பின் பலமுறை திருத்த வேலைகள் செய்யப்பட்ட பொழுதும் இது உறுதியானதாக அமையவில்லை.

பாலத்தில் உள்ள இரும்புத் தகடுகளும் மரப்பலகைகளும் பெருமளவில் சேதமடைந்தும் இடம்பெயர்ந்தும் காணப்படுகின்றன.

இந்தப் பாலத்தை திருத்தும் செய்யாது சம்பந்தப்பட்டவர்கள் பாராமுகமாக இருப்பதாக தீவகப் பயணிகள் விசனம் தெரிவிக் கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தீவுப்பகுதியில் இயங்கும் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினரும் பொதுமக்களும் இது தொடர்பாக பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஏ-88)

## நாட்டு நடப்பு

**அறுபதைத் தாண்ட அனைத்துமே வந்து சேரும்**

கம்பியை வாய்க்குள் வைத்து
கடும் ஜுரம் என்று கூறி
வந்தது மலேரியா நோய்
வார்ட்டிலே படுப்பாய் என்றார்
குழலினை நெஞ்சில் வைத்து
கூடிற்று சனியும் என்றார்
பெட்டியில் வயரைப் பூட்டி
பிணைத்ததை கையில் கட்டி
உற்றது பிரசர் இனி நீ
உப்பினை விடுவாய் என்றார்
சலத்தினை சூடு காட்டி
சலரோகமும் உண்டு என்றார்
அறுபதை அகவை தாண்ட
அனைத்துமே வந்து சேரும்
உண்டிதான் இதற்கு காலோ
ஊழ்வினையோ அறிகிலேனே!

- விகடகவி.

## இந்து மாநாட்டையொட்டி யாழில்

# வீடுகள் மற்றும் ஆலயங்களுக்கான கலாசார அலங்காரப் போட்டிகள்

### பணப்பரிசில்கள், உபகரணங்கள் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.22

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு யாழ்ப்பாணத்தில் போட்டிகளையும், சிறப்பு நிகழ்வுகளையும் நடத்தவுள்ளது.

ஆலயங்கள், பாடசாலைகள், கிராம முன்னேற்றச் சங்கங் கள், தனிநபர் வீடுகள், முன்பள்ளிகள், அறநெறிப் பாடசாலை கள், வணிக நிலையங்கள், பல நோ.கூ.சங்கங்கள், கிராமங் கள், அரசநிறுவனங்கள் மற்றும் இந்துக்குருமார், சைவக்குரு மார் ஆகியோருக்கு இடையில் பிரதேச அடிப்படையில் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன என அறிவிக்கப்பட் டுள்ளது.

இந்தப் போட்டிகள் குறித்து இந்து கலாசார அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

இந்துமாநாடு இடம்பெறும் மேமாதம் 2 ஆம் திகதி தொடக் கம் 10 ஆம் திகதி வரை யாழ்.மாவட்டத்தில் மாநாட்டின் சிறப்பு, நோக்கம், சமயவளர்ச்சி, மேன்மை என்பவற்றை அடிப்படையா கக் கொண்டும் இந்த சமய எழுச்சியைக் இலக்காகக் கொண் டும் இந்தப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறுகின்ற ஸ்தா பனங்களுக்கு பணப் பரிசில்களும், கோவில் பூசை உபகரணங் களும் அன்பளிப்பாக வழங்கப்படும்.

போட்டிகளில் முதன்மைப் பரிசைப் பெறுகின்ற நிறுவனங்களை மாவட்ட அரச அதிபர் தலைமையிலான குழு தெரிவுசெய்யும்.

இந்தப் போட்டிகளுக்கான தெரிவு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இடம்பெறும். அரச அதிபர் தலைமையிலான இந்தத் தெரிவுக்குழுவில் பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத் தர், கிராம அலுவலர்கள், சமய பெரியோர்கள் இடம்பெறுவர். இவர்களின் தெரிவே இறுதியானதாக அமையும் - என்று அதில் உள்ளது.

இதற்கிடையில் - மேற்படி போட்டிகள் மற்றும் சிறப்பு நிகழ்வுகள் சம்பந்தமான சகல விவரங்களும் குடாநாட்டில் உள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் -

பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தி யோகத்தர்களிடம் போட்டிகள் தொடர்பான மேலதிக விவரங்க ளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

இந்து கலாசார அமைச்சின் யாழ்.பிராந்திய உதவிப்பணிப் பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அறிவித்துள்ளார்.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கான பரிசில் கள் அடுத்த மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடை பெறும் பிராந்திய இந்து மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வில் வைத்து வழங்கப்படும் என்றும் -

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் இந்தப் பரிசில் களுக்கென ரூபா 6 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார் என்றும் - அவர் அறிவித்துள்ளார். (எ)

## யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள

# சமுர்த்தி அபிவிருத்தி வேலைகளுக்கு 2கோடியே 48 இலட்சம் நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு,ஏப்.22

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தித்திட்ட வேலை களை முன்னெடுத்துச் செல்வதற்கென சமுர்த்தி அதிகாரசபை இவ்வாண்டு 2கோடியே 48லட்சத்து 12ஆயிரத்து எண்ணூற்றி முப்பத்தைந்து ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

மேற்படி நிதி யாழ்.மாவட்டத்தில் பின்வரும் கருத்திட்டங் களுக்குப் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வாராந்த சந்தை அமைத்தலுக்கு 6இலட்சம் ரூபாவும், நடமாடும் வியாபார நிலையங்களுக்கான தொழில் முயற்சிக்கு 3இலட்சத்து 75ஆயிரம் ரூபாவும் -

வீட்டு வியாபார தொழில் முயற்சிக்கு 3இலட்சத்து 20ஆயி ரம் ரூபாவும், கால்நடை அபிவிருத்தி மற்றும் மீன்பிடி, பால் உற்பத்தித் தொழில் முயற்சிகளுக்கு 3இலட்சத்து 50ஆயிரம் ரூபாவும் -

ஆடு, கோழி வளர்ப்புக்கு 6இலட்சத்து 45ஆயிரம் ரூபாவும், விவசாய தொழில் முயற்சிக்கு 4இலட்சத்து 50ஆயிரம் ரூபாவும் -

மரநடுகைக்கு 11ஆயிரத்து எண்ணூறு ரூபாவும் மரக்கன்று நாற்றுமேடை அமைத்தலுக்கு 4ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இக் கருத்திட்டங்களில் இணைய விரும்புபவர்கள் மற்றும் மேலதிக விவரங்களைப்பெற விரும்புபவர்கள் தத்தமது பகுதி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-86)

## குப்பிவிளக்கு விழுந்து கர்ப்பிணி காயம்!

யாழ்ப்பாணம்,ஏப்.22

நித்திரையில் குப்பிவிளக்கு தட்டுப்பட்டு தீப்பற்றியதில் 6 மாதக் கர்ப்பிணிப் பெண் ஒருவர் எரிகாயத்திற்குள்ளானார்.

முல்லைத்தீவு முள்ளிவளைப் பகுதியில் கடந்த சனிக் கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் சசிக்குமார் அருள் றோஜினி (வயது 22) என் பவரே தீக்காயங்களுக்குள்ளா னவராவார்.

காயமடைந்தவர் முல்லைத் தீவு ஆஸ்பத்திரியில் அனும திக்கப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக யாழ்.போதனா வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டுள் ளார். (ஒ-15)

### நாளை

சித்திரை 10
புதன்கிழமை
23.04.2003
திதி : ஸப்தமி
நள்ளிரவு 11.59 வரை
நட்சத்திரம் : உத்தராடம்
பின்னிரவு 12.43 வரை
சுபநேரம் : 4.30 - 6.00
ராகுகாலம் : 12.00 - 1.30
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

போரை ஆரம்பிக்க முன் னர் அதனைத் தவிர்க்கும் முயற்சியில் ஈடுபடுங்கள்.

## அந்தரங்க செயலர், சுருக்கெழுத்தாளர் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

ஆங்கில மொழி மூலத்திலான அந்தரங்கச் செயலாளர், சுருக் கெழுத்தாளர் பயிற்சி நெறிக்குப் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பயிற்சியின் பின் தொழில் வாய்ப்பு அதிகமாகவுள்ள மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபைத் தலைவர் கோரியுள்ளார்.

18 மாதம் முழு நேரக் கற்கையைக் கொண்ட மேற்படி பயிற்சி நெறிக்கு ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் தமிழ், கணிதம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி யடைந்த இருத்தல் வேண்டும்.

மேற்படி பயிற்சிக்கு விண்ணப்பம் செய்வோர் 25 வயதுக்கு மேற்படாதவர்களாக இருக்கவேண்டும்.

முழுப்பெயர், விலாசம், பிறந்த திகதி, அடையாள இலக்கம், கல்வித் தகைமை போன்றவை அடங்கிய விண்ணப்பத்தை அடுத்தமாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டு மென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-185)

# அறநெறியைப் போதிப்பதற்கு ஆலயங்கள் முன்வர வேண்டும்

## மூத்த எழுத்தாளர் சிற்பி தெரிவிப்பு

வலிகாமம்,ஏப்.22

அறநெறிக்கல்வியைப் போதிக்க ஆலயங்களும், கல்வி நிலையங்களும் முன்வரவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் முன்னாள அதிபரும், பிரபல எழுத்தாளருமான சி.சிவசரவணபவன் (சிற்பி).

மானிப்பாயில் நடைபெற்ற 'மருதடியான் மலர்' நூல் வெளியீட்டு விழாவில் மதிப்பீட்டுரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மருதடி விநாயகர் ஆலய அன்னதான மண்டபத்தில் சமூகஜோதி கா. கணேசதாசன் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

சி.சிவசரவணபவன் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு குழந்தை பிறந்தது முதல் இறக்கும்வரை அறநெறிக் கொள்கைகளை கடைப்பிடித்துவந்தால் நாட்டில் அமைதிஏற்படும்; சமாதானம் நிலைக்கும்; சாந்தி ஏற்படும். இன்றைய இளைஞர்களுக்கு அறநெறித் தத்துவங்களைப்போதித்து நல்வழிப்படுத்த சமய நிறுவனங்கள், ஆலய தர்மகர்த்தாக்கள், அறநெறி நிலையங்கள் முன்வரவேண்டும். சமுதாய மேம்பாட்டுக்கும், பொதுநல நோக்கங்களுக்குமாக அவை பணியாற்ற வேண்டும்.

இன்றைய மாணவர்களை - இளம் சமுதாயத்தினரை - திருத்துவது பெற்றோர்களின் கடமை என்று ஆசிரியர்களும், ஆசிரியர்களின் கடமை என பெற்றோர்களும், பெற்றோர் - ஆசிரியர்களின் கடமை என மதத் தலைவர்களும் ஒருவரை ஒருவர் சாட்டுவதால் பயனில்லை. இவர்கள் மூவரும் இணைந்தே இளஞ்சமுதாயத்தை தவறான பாதையில் செல்ல விடாது அறநெறி வாழ்வுவாழச் செய்யும் பொறுப்பை ஏற்க வேண்டும் - என்றார்.

ஆசிரியர் ஆறு.திருமுருகன் தமது உரையில் கூறியதாவது:-

மனம், மொழி, மெய் ஆகியவற்றால் நல்லனவற்றை செய்வதே அறம். மனதால் செய்யும் அறம் இறைவன்பால் நம்பிக்கை வைப்பதும், நல்லனவற்றை நினைப்பதுமாகும்.

மொழியால் செய்யும் அறம் என்பது - பிறர்மனதை புண்படுத்தாது இன்சொல் பேசுவதும், ஆண்டவன் புகழ் பாடி வணங்குவதுமாகும். மெய்யால் செய்யும் அறம் பிற உயிர்களுக்கும், அடியவர்களுக்கும் தொண்டு செய்வதும் ஆலய வழிபாடு செய்தலுமாகும்.

மனதில் அழுக்காறு, அவா, வெகுளி கொண்டு தானதர்மம் செய்வது அறமாகாது. இன்றைய இளைஞர்களுக்கு இறைநம்பிக்கை, நல்லவற்றை எண்ணும் பயிற்சி, பண்பான வாழ்வு வாழ வழிகாட்டல் என்பனவற்றை ஊட்டுவது பெற்றோர், ஆசிரியர்கள், மதத் தலைவர்களின் கடமையாகும்.

சமயதத்துவங்களை இளம் வயதிலேயே உணர்ந்து கொள்ளும் மாணவர்கள் தமது வாழ்க்கையில் சமயக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வாழ்வை அறநெறிப்படுத்திக் கொள்கின்றனர். முதியோர்களை மதித்தல், அறநெறிகளைப் பின்பற்றுதல் என்பனவற்றில் இளைஞர்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு அறநெறிப் பாடசாலைகளுக்கு உண்டு. மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையினர் அப்பணியினை சிறப்பாகச் செய்து வருகின்றனர் - என்றார்.

அறநெறிப் பாடசாலையினரால் நடத்தப்பட்ட சைவசமய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு இந்து சமய விவகார அமைச்சின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் பரிசில்களை வழங்கினார்.

சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் சி.செல்வராசா, ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் த.சிதம்பர நடராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (எ-152)

### பதவி உயர்வுப் பரீட்சைக்கு விசேட வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஏப்.22

எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள எழுதுவினைஞர் தரம்IIஇற்கான பதவி உயர்வுப் பரீட்சைக்கான விசேட வகுப்புகள் நேற்று திங்கட்கிழமை யாழ்.மாநகர சபையில் ஆரம்பமாகி உள்ளன என உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் அறிவித்துள்ளது.

இந்த வகுப்புகள் ஒவ்வொரு சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் காலை 9மணிமுதல் இடம்பெறும் என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் செ.சந்திரசேகரம் அறிவித்துள்ளார். (எ-3)

### கைதடியில் இன்று வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

கைதடி,ஏப்.22

கைதடிப் பிரதேசத்தில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை பின்வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றப்பட-வுள்ளது என கைதடிப் பொதுச்சுகாதார பரிசோதகர் செ.சவுந்தரராசா அறிவித்துள்ளார்.

கைதடி குமரநகர் சனசமூக நிலையத்தில் காலை 9.00 மணி தொடக்கம் 10.30 மணி வரையும் -

கைதடி உதய சூரியன் சனசமூக நிலையத்தில் காலை 10.45 மணி தொடக்கம் 12.00 மணி வரையும் -

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தில் பிற்பகல் 12.15 மணி தொடக்கம் 1.15 மணி வரையும் -

கைதடி சைவ ஐக்கிய சங்கத்தில் பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 230 மணி வரையும் தடுப்பூசி ஏற்றபடும் என்றும் -

அன்றைய தினம் தவறாது தங்கள் வளர்ப்பு நாய்களைக் கொண்டுவந்து தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறும் - அவர் மேலும் அறிவித்துள்ளார். (எ-75)

### உணவுச் சாலைகளில் திடீர் பரிசோதனை

வலிகாமம் தெற்கு, ஏப்.22

சுன்னாகம் நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள், உணவுச்சாலைகள் மருந்து விற்பனை நிலையங்கள் மீது சுகாதாரப் பகுதியினர் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

யாழ்.மாவட்ட உணவு மருந்து பரிசோதகர் தி.மகாதேவன், சுன்னாகம் நகர பொதுச்சுகாதார பரிசோதகர் கே.பத்மகுமார் ஆகியோர் இணைந்து திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இந்த திடீர் பரிசோதனைகளின் போது பல வியாபார நிலையங்களில் காலாவதியான பிஸ்கெட் பெட்டிகள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. மேற்படி வியாபார நிலையங்களின் உரிமையாளர்களுக்கெதிராக மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.(எ-152)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26 - 04 - 1941

மறைவு 02 - 05 - 2002

6ஆம் வட்டாரம், புங்குடுதீவு

**அமரர் கார்த்திகேசு சுந்தரலிங்கம்**

**(இளைப்பாறிய எழுதுவினைஞர், யாழ்.கிளிநொச்சி கச்சேரி)**

**திதி: 22.04.2003 சஷ்டி**

**ஆண்டு ஒன்று ஆயினும் ஆறவில்லை எம் துயரம்**
**எத்தனை உறவுகள் எமக்கிருப்பினும் நித்தமும்**
**அப்பா என்றழைக்க இந்த உலகில் நீங்களில்லையே!**
**உங்கள் இனிய நினைவுகள் என்றும்**
**எமது உள்ளங்களில் நிறைந்திருக்கும்.**

*இல. 64, ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.*

(17053)

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



மலர்வு 16 - 05 - 1921

உதிர்வு 23 - 03 - 2003

### திருமதி ஏரம்பமூர்த்தி ஜானகி அம்மா

23-03-2003 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் **இன்று (22-04-2003)** செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அவ்வேளை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வைத்தியசாலை விடுதி - 1,
மக்லவுட் பொது வைத்தியசாலை,
இணுவில்.

(16978)

**பிள்ளைகள்,மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

## நன்னீர்க்கிணறு புனரமைப்பு

கைதடி மத்திய மருந்தகத்திற்கு முன்பாகவுள்ள நன்னீர்க்கிணறு பட்டினிக்கெதிரான இயக்கத்தினால் அண்மையில் புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த நன்னீர்க்கிணறு மூலம் கைதடி தெற்கு, நாவற்குழி செல்வநகர், கைதடி அரச வடிசாலை வீதி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பல் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் நன்மை பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.



## வழங்குநர்கள் தேவை

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கோபுரத் திருப்பணிக்கான வேலைகளுக்கு சல்லிக்கல், கண்டாவளை மணல் (மாதிரி காட்டப்படல் வேண்டும்), சீமெந்து (வகை குறிப்பிடவும்) ஆகியவற்றை விநியோகிக்கக்கூடியவர்களிடமிருந்து கூறு விலைகள் கோரப்படுகின்றன.

பொருள்கள் குறிகாட்டுவான் துறைமுகத்தில் விநியோகிக்கப்படல் வேண்டும். விலை விவரங்களை 30-04-2003இற்குப் பிந்தாமல் *செயலாளர், நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு* எனும் விலாசத்திற்கு தபால் மூலம் அனுப்பவும்.

### விற்பனைக்குண்டு

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில் பின்வரும் பொருள்கள் விற்பனைக்குண்டு. ஆர்வமுடையோர் நேரடியாகப் பார்வையிட்டு கேள்வித் தொகையை 30-04-2003இற்கு முன் சமர்ப்பிக்கவும். ஆலய வேலை நேரத்தில் பொருள்களைப் பார்வையிடலாம்.

மின் பிறப்பாக்கிகள் - 2 நீர்ப்பம்பி -1

படகிலிருந்து அகற்றப்பட்ட குளிரூட்டி - 1

(17056)

**கு.சரவணபவானந்தன்** ஜே.பி.
கௌரவ செயலாளர்

## ஈர விழிகளுடன் ஈழ மண்ணின் மைந்தனுக்கு

### 2 ஆம் ஆண்டு வீர வணக்கம்



அரும்பாய் 24 - 04 - 1978

விதையாய் 22 - 04 - 2001

### மேஜர் பிருந்தன்

**கனகரத்தினம் கனகரூபன்** (கண்ணன்)

களமாடி நின்ற கவின் புலி நீ
காட்டிக் கொடுப்பால் காவியமாய்
வளமான திருநெல்வேலி தனில்
வஞ்சத்தால் வீழ்ந்தாய் வரிப்புலியே!
உள்ளங்களிலே என்றும் உன்நாமம்
உயர் தமிழாய் வாழும் விதையாகி
இளம்புலியே மீண்டும் நீ வாராயோ?
இனிய தமிழ்வாழக் களம் ஆடாயோ?
உன் நாமம் என்றும் எம் நெஞ்சில்.

*சாவகச்சேரி.*

(C-27503)

நினைவு கூரும்:
**உற்றார், உறவினர்.**

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை *(நயினாதீவு)*

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்கள் 20.04.2003 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசி அவர்களின் அன்புக் கணவரும் பத்மநாதன் (ஓய்வுபெற்ற நிதி உதவியாளர், உடுவில் பிரதேச செயலகம், U.N.H.C.R. மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம்), சுப்பையா (S.V.M.கொழும்பு) விமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பரிமளம் (ஓய்வுபெற்ற உப அதிபர், இராமநாதன் கல்லூரி), பரமேஸ்வரி, திருவாசகநாதர் (ஆசிரியர், ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மீரா-குருபரன் (கனடா), Dr.ஸ்ரீகுமார், காலஞ்சென்ற முரளிகுமார், அனுசுயா-பாஸ்கரன் (இத்தாலி), வேணுகா, சுரேஸ் (பிரான்ஸ்), குகனேஸ், சுபாகரன், சுபாஜினி - புவனேஸ்வரன் (சுவிஸ்), சுகந்தினி, சுதர்ஜினி, சுதாஜினி, சுசீலாதேவி ஆகியோரின் அன்புப் பேரனாரும் சுஜந்திகா (சுவிஸ்), ஹரிஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இலக்கம் 3, அம்பலவாணர் வீதி, உடுவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3,அம்பலவாணர் வீதி, உடுவில்.*

(17058)

தகவல்
**க.பத்மநாதன் (மகன்)**

### திருமதி விஜயரத்தினம் சிவயோகம்

**(ஓய்வுபெற்ற அதிபர், காரைநகர்)**

19-4-2003 இல் சிவபதம் அடைந்த காரைநகர், நீலிப்பந்தனையைச் சேர்ந்த திருமதி விஜயரத்தினம் சிவயோகம் அவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று(22-04-2003) செவ்வாய்க்கிழமை 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 4.00மணியளவில் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நீலிப்பந்தனை,
காரைநகர்

(17063)

தகவல்:
**க.ந.விஜயரட்ணம்(கணவர்)**

# குடாநாட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்த நீர் வேளாண்மை

யுத்தத்தால் சீரழிந்துபோன நமது பிரதேசத்தில் சமாதான சூழ்நிலை நிலவுகிறது. கடந்தகால துன்பங்களில் இருந்து மீள்வதற்கு நாம் விரும்பியே சமாதான சூழ்நிலையை எதிர்பார்த்தோம். ஆனால், அதனை எதிர்கொள்ள



நாம் தயாராக இருக்கவில்லை.

அதனால், இன்றைய சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி வெளிநாட்டவரும், தென்னிலங்கை நிறுவனங்களும் தமது உற்பத்திகளை இங்கு சந்தைப்படுத்த நாமோ அவற்றை வாங்கி அனுபவிப்பதுடன் நின்றுவிடுகிறோம்.

வேலைவாய்ப்பில்லை என்று புலம்பிக்கொண்டே பொழுது போக்குகளில் மூழ்கிவிட்டோம்.

முக்கியமாக கடல்வளம் சூழ்ந்த நமது பிரதேசத்தில் நீர் வேளாண்மை வாய்ப்பு அதிகமுண்டு.

காலங்காலமாக மேற்கொள்ளப்பட்ட பயிர் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு ஆகியவற்றிலேயே நாம் தொடர்ந்து ஈடுபடுகிறோம். அதைத் தாண்டி கடற்றொழிலில் ஈடுபடுகின்றோம்.

அதையும் தாண்டி நீர் வேளாண்மையில் அதிக அக்கறை காட்ட வேண்டியது இன்றைய சூழ்நிலையில் அவசியமாகும். நாம் நன்னீர் வளத்தையும் உவர் நீர் வளத்தையும் நன்கு பயன்படுத்துவதன் மூலம் எமது சமுதாயத்தில் காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாடு (Malnutrition), பொருளாதார பின்னடைவு (Economic Defeciency), வேலைவாய்ப்பின்மை (Unemployment Problem) ஆகியவற்றை கணிசமாகக் குறைக்க முடியும்.

இயற்கை வளத்தையும் மனித வளத்தையும் ஒருங்கிணைக்கும் நீர் வேளாண்மையால் மேற்கூறிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும்.

ஆதிகாலங்களில் மனிதனுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் இயற்கையிலேயே கிடைத்ததால் அவற்றை உற்பத்தி செய்யும் அவசியம் அவனுக்கு இல்லாமலிருந்தது. ஆனால், மக்கள் தொகைப் பெருக்கமும் நாகரிக வளர்ச்சியும் பெற்ற பின்பு மனிதன் தன் அறிவைப் பயன்படுத்தி தனக்குத் தேவையான உணவுப் பொருள்களை பயிர்செய்து பெற்றான். இவ்வாறு நிலப்பகுதியில் பயிர் செய்தலுக்கு வேளாண்மை (Agriculture) என்றும், நீர்ப்பகுதியில் மீன்கள், இறால்கள் போன்ற விலங்கினங்களையும், மற்ற தாவர இனங்களையும் பயிர் செய்தலுக்கு நீர் வேளாண்மை (Aquaculture) என்றும் பெயரிட்டனர்.

**குமார்**

மனிதன் உணவிற்காகவும், இதர தேவைகளுக்காகவும் தாவரங்களல்லாது பல விலங்கினங்களையும் பண்ணை முறையில் வளர்க்கத் தொடங்கினான். அந்த வகையில் வளர்ச்சியடைந்ததே பட்டுப்புழு வளர்ப்பு (Sericulture), தேனீ வளர்ப்பு(Apiculture), அரக்குப்பூச்சி வளர்ப்பு (Lacculture), இறால் வளர்ப்பு (Prawn Culture), மீன் வளர்ப்பு (Fish Culture), கோழி வளர்ப்பு ( Poultry farming), காடை வளர்ப்பு (Ouailary), வாத்து வளர்ப்பு (Duck farming), முயல் வளர்ப்பு (Rabbit farming), பன்றி வளர்ப்பு (Piggery), கறவை மாடு வளர்ப்பு (Dairy Farming) மற்றும் இதர கால்நடைகள் வளர்ப்பு (Animal Husbandry) ஆகியவை.

விலங்குகளன்றித் தாவரங்களில் கீழ் வகுப்பைச் சேர்ந்த உணவுக் காளான்களையும் வளர்க்கத் தொடங்கினர். இன்று பல இடங்களில் சிறந்த உணவுக் காளான்களாக சிப்பிக் காளான் (Oyster Mushroom) மற்றும் பொத்தான் காளான் (Button Mushroom) ஆகியவை பயிரிடப்படுகின்றன.

நிலப்பகுதியில் செய்யும் வேளாண்மையைப் போலல்லாமல் நீர் வேளாண்மை செய்வதற்கு அதிகக் கவனமும் ஆர்வமும் தேவை. பயிர் செய்வதற்கு முன் எவ்வாறு நிலத்தைப் பண்படுத்துகிறோமோ அதே போல் நீரையும் பயன்படுத்தி உற்பத்தித் திறனைப் பெருக்க இயற்கை மற்றும் செயற்கை உரங்களை இட வேண்டும். நீர்வாழ் உயிரினங்களின் வாழ்க்கை ஒரு முப்பரிமாண வாழ்கை (Three dimensional life) யாகையால் வளர்ப்புக் காலங்களில் வளர்ப்பினங்களுக்குத் தேவையான நல்ல சூழலை உருவாக்கித் தருதல், உணவு மற்றும் பிராணவாயுத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், நீரின் தரமாற்றங்களைக் கவனித்து நீரின் தரம் குறையாமல் நல்ல வேளாண்மை (water Quality Management) செய்தல் ஆகியவை நீர் வேளாண்மையில் அவசியமாகும்.

பொதுவாக நீர் வேளாண்மையை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

(அ) நன்னீர் வேளாண்மை - (Fresh Water Aquaculture or inland Fisheries)

(ஆ) உவர்நீர் வேளாண்மை - (Brackish Water Aquaculture)

(இ) கடல்நீர் வேளாண்மை - (Marine Water aquaculture or Mariculture)

இன்று உலகில் நீர் வேளாண்மைக்கு நுண்ணுயிரிகளில் (Microbes) தொடங்கி முதுகெலும்பற்ற இனங்களான கணுக்காலிகள் (Orthropods), மெல்லுடலிகள் (Molluscs) மற்றும் முதுகெலும்புள்ள மீன்கள் (Pisces), இருவாழ்விகள் (Amphibians) மற்றும் ஊர்வன (Reptiles) வரை பல விதமான உயிர்கள் உணவுக்காகவும் அழகுக்காகவும் மற்றும் இதரபல தேவைகளுக்காகவும் வளர்க்கப்படுகின்றன.

நீர் வேளாண்மை போன்ற துறைகள் நமது மண்ணில் ஊக்குவிக்கப்பட வேண்டும். இதற்கு பல்கலைக்கழக மட்டத்தில் உள்ள இது சார்ந்த துறையினரும், பொது அமைப்புகளும் முன்வரவேண்டும்.




## வெங்காயம் அமோக விளைச்சல் ஆயினும் சந்தைவசதி இல்லை

### உரிய நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

வலி.தெற்கு,ஏப்.22

யாழ்மாவட்டத்தில் இம்முறை வெங்காயச் செய்கை நல்ல விளைச்சலைத் தந்திருப்பதாகவும்-

எனினும், உரிய சந்தைவாய்ப்பு இன்மையால் அவற்றைச் சந்தைப்படுத்தமுடியாமல் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர் என்றும்-

கமநலசேவைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவ்வருடம் யாழ்ப்பாண குடாநாட்டில் சுமார் ஏழாயிரம் ஹெக்டெயர் நிலப்பரப்பில் வெங்காயம் செய்கை பண்ணப்பட்டதாகவும் -

வலிகாமம் மற்றும் வடமராட்சி போன்ற இடங்களிலேயே அதிகளவில் அவை பயிரிடப்பட்டதாகவும் - அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இப்பகுதிகளில் விளைவிக்கப்பட்ட சுமார் 30ஆயிரம் மெட்றிக் தொன் வெங்காயம் போதிய சந்தை வாய்ப்பு இல்லாமல் தேங்கிக்கிடப்பதாகவும் -

அதிக அளவில் மூலதனம் இட்டு பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் - அதிக ஆர்வத்துடன் வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட தாம் அவற்றைச் சந்தைப்படுத்த முடியாமையால் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் - விவசாயிகள் தரப்பில் கூறப்பட்டது.

உள்ளூர் சந்தைகளில் ஒரு கிலோ வெங்காயத்தை 20ரூபா வரையிலேயே விற்பனை செய்ய முடிவதாகவும்-

சந்தைகளில் வெங்காயத்துக்கு அதிக அளவு கழிவு கழிக்கப்படுவதால் தாம் மேலும் நஷ்டம் அடைவதாகவும்-விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யக் கூடிய நடவடிக்கைகளை விவசாயிகள் நலன் காக்கும் அமைப்புக்கள் மேற்கொள்ளவேண்டும் என்றும் - விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(எ-152)

## தென்னை நிதித்திட்டத்துக்கான விண்ணப்பப் படிவம் பற்றாக்குறை

வரணி,ஏப்.22

கொடிகாமம் கமநல சேவை நிலையத்துக்கு தென்னைப்பயிர்ச் செய்கை 'செஸ்' நிதி திட்டத்திற்கான விண்ணப் படிவங்கள் போதியளவு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பயனாளிகளுக்கு மாதிரி விண்ணப்பப்படிவத்தைக் கொடுத்து நிழற்பிரதி எடுத்து விண்ணப்பிக்கும்படி ஆலோசனை கூறப்படுவதாகவும்-

இதன்படி பயனாளிகள் தமது பயணத்தைச் செலவழித்து விண்ணப்பப்பிரதியை நிழற்படப்பிரதி எடுத்துவிட்டு உரிய பிரதியை திருப்பிக் கொடுப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

மேலும் இவ்விண்ணப்பங்கள் இரண்டு பிரதிகளில் விண்ணப்பிக்க வேண்டியுள்ளதாகவும் -

விண்ணப்பப்படிவங்களை நல்லூரில் உள்ள தலைமைக் காரியாலத்திலேயே நேரில் கையளிக்க வேண்டியுள்ளதாகவும்-

பயனாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(ஒ-170)



வலி.கிழக்கு தென்பகுதி பல நோ.கூ. சங்கத்தின் பொது முகாமையாளராகக் கடமையாற்றிய ச.இராசசேகரத்தின் சேவை நலன் பாராட்டுவிழா அண்மையில் நடைபெற்றது.

விழா நாயகருக்கு எஸ்.மகாலிங்கம் மாலை அணிவித்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (ஏ)

## வாகன விபத்துக்களில் 11 பேர் உயிரிழப்பு! அநுராதபுரத்தில் 6 பேர் பலி; 17பேர் காயம்!!

கொழும்பு,ஏப்.22

கடந்த மூன்று தினங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 11பேர் உயிரிழந்துள்ளனர்; பலர் காயமடைந்துள்ளனர்.

மிக மோசமாகவும் கவனயீனமாகவும் வாகனங்கள் செலுத்தப்பட்டமையே இவ்விபத்துகளுக்கு காரணம் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த சனி மாலை கொழும்பு - யாழ்ப்பாணம் வீதியில் அநுராதபுரம், கல்குளம் என்னும் இடத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்; மேலும் 17பேர் காயமடைந்தனர். தனியார் சொகுசு பஸ் வண்டி ஒன்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றும் வான் ஒன்றும் மோதிக்கொண்டதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இறந்தவர்களில் இருவர் வவுனியா இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவத்தினராவர். சொகுசு பஸ்ஸின் சாரதியும் பலியாகியுள்ளார். ஏனைய மூவரின் சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

காயமடைந்தவர்கள் அநுராதபுரம், மிஹிந்தலை, கெக்கிராவ போன்ற வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் மூன்று பெண்களும் அடங்குவர்.

இதேவேளை, மாரவில எனும் பிரதேசத்தில் சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்றுக்கு வழிகாட்டியாகச் சென்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர். இவர்கள் இருவரும் நேற்று ஆரம்பமாகிய ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகத் தயாராக இருந்தவர்கள்.

நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் திம்பிரிகஸ்யாய பகுதியில் லொறி ஒன்றும் வான் ஒன்றும் மோதிக்கொண்டதில் இருவர் உயிரிழந்தனர். இந்த விபத்து இடம்பெற்றபோது லொறியில் இருபதுபேர் பயணம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பகுதியில் இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டி ஒன்றுக்கு ஆதரவு தெரிவிக்கவே இவர்கள் லொறியில் சென்றுள்ளனர். விபத்தில் வானில் இருந்த ஒருவரும் லொறியில் இருந்த ஒருவரும் உயிரிழந்துள்ளனர். லொறியில் பயணம் செய்த ஏனைய 19பேரும் காயமடைந்துள்ளனர். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இவர்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

கடந்த சனி பிற்பகல் இரத்தினபுரியில் மோட்டார் சைக்கிள் ஒன்று பஸ்ஸுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர் உயிரிழந்துள்ளார். இவர் இராணுவத்தில் பணிபுரியும் 26 வயதுடைய யூ.ஏ.எம். சஞ்சீவ என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

புத்தாண்டு விளையாட்டு விழாக்களின்போது இடம்பெற்ற விபத்துக்களில் மூவர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து பொலீஸாரின் அனுமதியின்றி மரதன் மற்றும் சைக்கிள் ஓட்டப்போட்டிகளை நடத்துவதை தடை செய்துள்ளதாக கொழும்பு போக்குவரத்துப் பொலீஸ் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

### கத்திக்குத்துக்கு இலக்காகி கைதடியில் மூன்று பேர் படுகாயம்!

கைதடி,ஏப்.22

வீட்டுப்பிணக்கு காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் முடிந்தது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கைதடி கிழக்கில் இடம்பெற்றிருக்கின்றது.

மேற்படி சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பன் தவராசா (வயது 32), வைரவன் தர்மராசா (வயது 39), பொன்னன் ஜெகதீஸ்வரன் (வயது 36) ஆகியோரே கத்திக் குத்துக்கு இலக்காகிப் படுகாயம் அடைந்து ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(எ-75)

## மொழித்திறன் போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

தென்மராட்சி,ஏப்.22

அரச ஊழியர்களுக்கான மொழித் திறன் வகுப்புகளை சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்துவதற்குப் போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் தென்மராட்சி கல்வி வலயத்தினால் கோரப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட பாடங்களை பட்டப்படமாகக் கொண்ட பட்டதாரிகள்; பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்கள் அல்லது உரிய தகைமைகொண்டவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

ஆரம்ப மட்டத்திற்கு கற்பிக்கும் போதனாசிரியர்களுக்கு மணித்தியாலத்திற்கு 250 ரூபாவும் -

உயர்நிலை மட்டத்திற்கு கற்பிப்பவர்களுக்கு மணித்தியாலத்திற்கு 350 ரூபாவும் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஒ-117)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சாவகச்சேரி, பழைய பொலீஸ் நிலைய வீதியில் டாக்டர் சண்முகராஜின் ஆஸ்பத்திரியாக இயங்கிய காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.பாஸ்கரன், 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (16964)

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்.மருத்துவ பீடத்திற்கு முன்னால் 4பரப்புக் காணியும், சங்கத்தானை ஆசிரியர் ஒழுங்கையில் 3 பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777-291711, 01-361769. (17060)

## கார் விற்பனைக்கு

லான்சர் வைகன் மொடல் 12சிறி தொடரிலக்கமுடைய கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: தீபன், 222 2332. (17059)

## திருமண சேவை

சீதனம் கொடுத்து திருமணம் செய்ய முடியாதிருப்பவர்கள், சீதனம் கொடுத்து செய்யக்கூடியவர்கள் ஆண்கள், பெண்கள் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ இருப்போர் நேரிலோ தபால மூலமோ தொடர்புகொள்ளலாம். உள்நாட்டு, வெளிநாட்டு விவரங்கள் உள்ளன. செல்லம்மா திருமணசேவை, கிழான் சங்கத்தடி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம் T.P.01 422619, 0777-047145, 0777- 047314 (16900)

1975ஆம் ஆண்டு, திருவோணம், செவ்வாய் குற்றமற்ற, Computer Engineer ஆக லண்டனில் தொழில் பார்க்கும் ஆணிற்கு படித்த, அழகான பெண் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (17029)

1972ஆம் ஆண்டு, பூசம், செவ்வாய்க் குற்றமற்ற, லண்டனில் சொந்தமாகத் தொழில் பார்க்கும் Citizen உடன் வந்துள்ள ஆணிற்கு அழகான, 5அடி உயரமுடைய பெண் தேவை. படத்துடன் தொடர்புகொள்ளவும். துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.(17028)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக குஞ்சுகள் 24-04-2003 வியாழக் கிழமை பிற்பகல் விநியோகிக்கப் படும். அத்துடன் Marec Vaccine போட்ட சிவப்பு சேவற் குஞ்சுகளும் உண்டு. முன்கூட்டியே பதிவு செய்யவும். (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (17061)

## தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் உடன் தேவை. கூடுதல் விலை தரப்படும். தொடர்பு: சிவா, இராமலிங்கம் றோட், முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (17070)

## பசு வைத்தியர் தேவை

பசு ஒன்று அபூர்வ நோயால் பீடிக்கப்பட்டு கழுத்து திரும்பிய நிலையில் கஷ்டப்படுகிறது. வைத்திய உதவி உடன் தேவை. தொடர்பு: சு.கணேசபிள்ளை, இல.134, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். T.P. 222 5145 (17064)

## மணமகள் தேவை

1972, மிருகசீரிடம், 4ஆம் கால் செவ்வாய்க் குற்றமற்ற லண்டன் மணமகனுக்கு லண்டனில் P.R. உள்ள மணமகள் தேவை. வேறு நாட்டு மணப்பெண்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: Dr.பொ.மகாலிங்கம், "அன்னமகால்" குப்பிளான் தெற்கு, கேணியடி, ஏழாலை.(17057)

## கசிப்பு உற்பத்தி செய்தோர் கைது

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சிலர் பொலீஸாரிடம் பிடிபட்டனர். இச்சம்பவம் நேற்று இரவு 7.30 மணியளவில் கோண்டாவில் கிழக்கு சென். செபஸ்தியார் ஆலயத்துக்கு சமீபமாக இடம்பெற்றது. இப்பகுதியில் ஏற்கனவே பொலீஸார் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு பலரை கைதுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஒ-49)

## தீவகப் பிரதேச பாடசாலைகளில் சத்துணவுத்திட்டம்

மண்டைதீவு,ஏப்.22

தீவகக் கல்வி வலயத்தில் 'யுனிசெவ்' நிறுவனத்தின் உதவியுடன் பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவுத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

எதிர்வரும் இரண்டாம் தவணை ஆரம்பத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளன.

நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவைச் சேர்ந்த 7பாடசாலைகள் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தரம் ஒன்றிலிருந்து தரம் ஐந்து வரையான மாணவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ளனர் (ஒ-88)

## மாணவ தலைவர்களுக்கு விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்மாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவ தலைவர்களுக்கான கருத்தரங்கு இல.82, குருசோ வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள அருட்கதிர் நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

கருத்தரங்கின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று காலை இடம்பெறும். 'ஆளுமையும் மனித உறவும்'என்ற பொருளில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்று வருகின்றது. (எ)

## கட்டுரைப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.22

சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினால் 'உதயன்' பத்திரிகை நிறுவன ஆதரவுடன் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களின் பெயர் விவரம் முறையே வருமாறு:-

மு.வேணுகானன் (கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு), சி.சியாமளா (சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்), வித்யா வேலும்மயிலும் (மெதடிஷ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை) ஆகியோரே இவ்வாறு பரிசுபெற்றுள்ளனர். (எ)

## சென்.லிகோறியார் தேவாலய பங்கு மக்கள் இரத்ததானம்

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கச்சாய் வீதி, சென் லிகோறியார் தேவாலயப் பங்கைச் சேர்ந்தவர்களால யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் வழங்கப்பட்டது.

தேவாலயத்திற்குச் சென்ற இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி, தாதியர் அடங்கிய குழுவினர் அங்கு வைத்தே இரத்தத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இப்பங்கு மக்களில் சுமார் 25பேர் இரத்ததானம் வழங்கியதாக இரத்த வங்கி வைத்திய அதிகாரி டாக்டர் சங்கர் தெரிவித்தார். (ஒ-15-117)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹா

## 19ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 14 - 01 - 1927



மறைவு 04 - 04 - 2003

### அமரர் கந்தையா மாசிலாமணிப்பத்தர்

இன்று (22.04.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.


*மணியர்பதி வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

(17069)

க.மகாதேவா குடும்பத்தினர்
(சகோதரன்)

## எம் நெஞ்சை விட்டகலா அன்புத் தெய்வத்தின்

# நினைவழியா ஓராண்டு



### அமரர் தம்பிஐயா குமாரசாமி (J.P.)

(சமாதான நீதிவான்)
(வேலணை கிழக்கு 3ஆம் வட்டாரம்)

மண் மகிழ 28-07-1958

கண்நெகிழ 04-05-2002

ஓராண்டு சென்றாலும்
நீங்காத நினைவாக
உம் பிரிவால் வாடுகின்றோம்
இல்லத்து விளக்காக
இருந்தெமைக் காத்தவரே!
நினைவழியா ஓராண்டில்
நெஞ்சம் நெகிழ்ந்து உமை
அஞ்சலித்து நிற்கின்றோம்.

*மருத்துவபீட முகரி*
ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(17062)

பிரிவால் துயருறும்....
குடும்பத்தினர்.

# மணல் அகழ்வால் கடல் புகுந்து தீவாகும் கச்சாய்ப் பிரதேசம்

**கொடிகாமம் செய்தியாளர்**

**செய்திக் கட்டுரை**

தென்மராட்சியின் வளம் நிறைந்த பிரதேசம் கச்சாய். பல ஆண்டுகளுக்கு முன்பு மன்னர்களால் கோட்டை கட்டப்பட்டு துறைமுக வசதியும் ஏற்படுத்தப்பட்டு வளம் கொழித்த பிரதேசம் இது.

ஆனால், நாட்டில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இற்றைவரை இப்பிரதேச வளங்கள் கேட்பாரற்று சீரழிக்கப்பட்டு வருகின்றன. அதிலும் இயற்கை வளங்கள் சுயநலவாதிகளால் கட்டுப்பாடின்றி அழிக்கப்படுவது வாடிக்கையாகிவிட்டது. குறிப்பாக இப்பிரதேசத்தின் மணல் வளம் வியாபார நோக்கத்தால் பேரழிவுக்குள்ளாகி வருவது பிரதேச மக்களை பெரும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

**கச்சாயின் மண்வளம்**

கச்சாயில் மண்வளம் கடற்கரையில் இருந்து சுமார் அரைக் கிலோ மீற்றர் தூரம் சுமார் 15அடி ஆழத்துக்கும் சுமார் 5கி.மீற்றர் நீளத்துக்கும் மணல் வியாபாரம் என்ற போர்வையில் அழிக்கப்பட்டுவிட்டது; இன்னும் அழிக்கப்பட்டு வருகிறது. - இவ்வாறு மணல் அகழப்படுவதால் கடற்கரையில் நூற்றுக்கும் மேற்பட்ட தென்னை மரங்களும், பனைமரங்களும் வேரோடு அழிக்கப்பட்டுள்ளன. இதைவிட கடந்த யுத்த காலத்தில் தென்னை மற்றும் பனை மரங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டன. இம் மணல் அகழ்வு அல்லாரை, கச்சாய், கெற்பேலி, பாலாவி வரை மாறிமாறி இடம்பெற்று வருகிறது. இப் பிரதேசம் வறிய விவசாயிகள் வாழுகின்ற பிரதேசம். இவர்களுக்கு பேரிடி விழுந்துள்ளது. கடல்நீர் விவசாய நிலங்களுக்குள் புகும் அளவிற்கு மணல் அகழ்வு இடம்பெறுவதே இதற்குக் காரணமாகும்.

மணல் பிரதேசங்களில் உள்ள மரங்கள் தறிக்கப்பட்டமையால் காற்றின் வேகம் அதிகரித்து வருவதாகக கூறப்படுகிறது. இதனால், மணல் அரிப்பு அதிகரிப்பதுடன், ஓலைக் குடிசைகளுக்கும் இதனால் பாதிப்பு ஏற்படுகிறது.

இது இவ்வாறிருக்க இனிவரும் மழை காலத்தில் ஆலயமும் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதேபோல் கோயில் காணிகள் மற்றும தனியார் காணிகளில் அனுமதியின்றி மணல் அகழப்படுவதால் காணிகள் குளங்களாக மாறிவரும் நிலை உருவாகியுள்ளது.

கச்சாய், அல்லாரை, கெற்பேலி, பாலாவி ஆகிய கடற்கரைப் பகுதிகளில் மீள உருவாகும் மணல்வளம காணப்படுவதில்லை. அத்துடன் நிலமட்டத்திற்கு மேலாக காணப்படுகின்ற மணல் மேடுகளும் இல்லை. இவை நிலமட்டத்திற்கு கீழ் கடற்கரையோரமாக ஒவ்வொரு மழைகாலத்திலும் கடலால் அரித்துச் செல்லப்படுகின்ற மணல் ஆகும். இதனையே கட்டுப்பாடின்றி வியாபாரிகள் அகழ்ந்து செல்கின்றனர்.

- இவ்வாறு மணல் அகழ்வால் கடல்நீர் உட்புகுந்து உருவான தீவே கச்சாய் கடலில் உள்ள சாளம்பன் தீவு. எனவே கச்சாய்ப் பிரதேசமும் மணல் அகழ்வால் தீவாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

**தென்மராட்சியின் அபிவிருத்தி**

கடந்தகால கொடூர யுத்தத்தில் பெருமளவில் பாதிப்படைந்தது தென்மராட்சிப் பிரதேசமே. அழிந்துபோன தென்மராட்சிப் பிரதேசத்தை மீளப் புனரமைக்க பெருமளவான நிதியும் மணல்வளமும் தேவை. நிதி அரசினாலும், வெளி நிறுவனங்களாலும் பெற்றுக்கொள்ள முடிந்தாலும் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள மணல் வளம் போதுமானதாக இல்லை. இவ்வாறான நிலைமையில் வியாபார நோக்கத்தில் டிராக்டர்கள் மூலம் ஒவ்வொரு நாளும் மணல் ஏற்றிச் செல்லப்படுகின்றது.

கச்சாய், அல்லாரை, கெற்பேலி, பாலாவி ஆகிய பிரதேசங்களில் மணல் அகழ பெருமளவான வாகனங்கள் வந்து செல்கின்றன. இதனால் பெரும்பாலான வீதிகள் படுமோசமாக பாதிப்படைந்துள்ளன.

சாவகச்சேரி - கச்சாய் வீதி, கொடிகாமம் - கச்சாய்வீதி, மீசாலை - அல்லாரை வீதி, கச்சாயில் இருந்து மீசாலைக்குச் செல்லும் மதவடி குறுக்குவீதி, ஆலடிவீதி, புங்கடி வீதி, அம்மன்கோயில் வீதி, சங்கிலிக் கிணத்தடி வீதி, பாலாவி வீதி என்பன கடந்த 20வருடங்களாக செப்பனிடப்படாத நிலையில் உள்ளன. இந்நிலையில் இவை மணல் வாகனங்களின் போக்குவரத்தால் மேலும் மோசமடைந்துள்ளன.

சுயலாபம் கருதி மணல் விற்பனையில் ஈடுபடுவோர் கேட்பார் எவருமின்றி கச்சாய்ப் பிரதேசத்தை நாசம் செய்கிறார்கள். இதேவேளை, பொது மக்கள் செல்ல அனுமதிக்கப்படாத பகுதிகளில்கூட மணல் அகழ்வு அதிகளவில் இடம்பெறுவதுதான் அதிக கவலையளிக்கும் விடயமாகும்.

இப்பிரதேசத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 100 தொடக்கம் 150 லோட் மணல் ஏற்றப்படுவதாகத் தெரிய வருகிறது.

தென்மராட்சிப் பிரதேசத்தின் மண்வளம் பெருமளவில் அழிக்கப்பட்டு வருவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை கொள்ளாது இருப்பதும் ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளாததும் மணல் அகழ்வில் ஏற்படும் தீய விளைவுகள் பற்றி அவர்களுக்குப் புரியவில்லை என்றே கருதவேண்டியுள்ளது. இவர்கள் கச்சாய்ப் பிரதேசத்துக்கு ஒருமுறையாவது சென்று பார்வையிட வேண்டும்.

அகழ்வு விவகாரத்துக்கு சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள், அரசியல்வாதிகள் போன்றோர் உடனடியாக ஒரு தீர்வு காண முன்வரமாட்டார்களா என கச்சாய்ப் பிரதேச பொதுமக்கள் காத்திருக்கிறார்கள். ◆

---

### எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில்

# கூட்டமைப்புடன் இணைந்தே காங்கிரஸ் போட்டியிடும்

## கட்சியின் கலந்துரையாடலில் முடிவு!

யாழ்ப்பாணம்,ஏப்.21

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தமிழ்க் கூட்டமைப்புடன் இணைந்தே போட்டியிடும் என்று அக்கட்சி முடிவெடுத்திருக்கின்றது.

- கட்சியின் யாழ்.மாவட்ட காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற கட்சி உறுப்பினர்களுக்கான கலந்துரையாடலின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. கஜேந்திரகுமார், கட்சிப்பிரமுகர் சி.வ. கே.சிவஞானம் மற்றும் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்ட இக்கலந்துரையாடலின்போது எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது மற்றும் மேதினத்தில் கட்சியின் சார்பாக மக்களை அணிதிரட்டி பங்கேற்பது போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புடன் இணைந்தே எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது என்றும் - அதற்கு முன்னர் இது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் கலந்தலோசிபது எனவும் - கலந்துரையாடலில் முடிவுசெய்யப்பட்டது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு அதிக விருப்பு வாக்குகள் கிடைத்த தொகுதிகளில் முதன்மை வேட்பாளர்களுக்கான இடத்தை காங்கிரஸ் கட்சிக்கே வழங்குமாறு கூட்டமைப்பிடம் வலியுறுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

எதிர்வரும் மே மாதம் உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றில் கொண்டுவரப்படவிருப்பதால், எதிர்வரும் தேர்தல் தொடர்பான ஏனைய முடிவுகளை அதன் பின்னரே மேற்கொள்வது சிறந்தது எனவும் கட்சித்தலைவர் அ.விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

எதிர்வரும் மேதினத்தில் கட்சி அங்கத்தவர்கள், தொண்டர்கள் என பெருமளவானோரை திரட்டி ஊர்திகள், பதாகைகள் சகிதம் பங்கேற்று மேதினத்தில் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் பங்களிப்பை சிறந்த முறையில் வெளிப்படுத்துவதெனவும் முடிவுசெய்யப்பட்டது. (ஐ-4)

---

# நுவரெலியாவில் பொலீஸாரைத் தாக்கி அட்டகாசம் புரிந்த ஆளும்கட்சி எம்.பி.!

கொழும்பு,ஏப்.22

நுவரெலியா தர்மபால சுற்றுவட்டாரப் பகுதயில் நேற்றுமுன்தினம் பர்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றின்போது போக்குவரத்துப் பிரிவு பொலீஸ் பொறுப்பதிகாரி ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் தாக்கப்பட்டனர் எனக் கூறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் நுவரெலியாவில் மோட்டார் சைக்கிள் பந்தயம் இடம்பெற்றது. இதனையொட்டி போக்குவரத்து விதிகளை, இறுக்கமாக மேற்கொள்ளுமாறு போக்குவரததுப் பொலீஸாருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அதற்கமைய வீதி ஒழுங்குகளை மேற்கொண்டிருந்த போக்குவரத்துப் பிரிவு பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரை ஆளும் கட்சியின் மத்திய கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தாக்கினார் எனக் கூறப்படுகின்றது.

இதையறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த நுவரெலியா போக்குவரத்துப் பிரிவு அதிகாரியை அந்த நாடாளுமன்ற உறுப்பினரும் அவரது ஆதரவாளர்களும் கடுமையாகத் தாக்கினராம். தாக்குதலுக்குள்ளான போக்குவரத்துப் பொலீஸ் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தற்போது நுவரெலிய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தை அடுத்து அந்த இடத்துக்கு வந்த நுவரெலிய சிரேஷ்ட காவல்துறை அத்தியட்சகரையும் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் தாக்க எத்தனித்தார் எனப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, இச்சம்பவங்களைப பார்த்துக்கொண்டிருந்த பொதுமக்கள், அந்த நாடாளுமன்ற உறுப்பினரைத தாக்க முற்பட்டனர். எனினும், ராகலைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சம்பவத்தில் தலையிட்டு நாடாளுமன்ற உறுப்பினரை அந்த இடத்திலிருந்து அனுப்பி வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் அட்டகாசத்தை நேரில் பார்த்ததாகக் கூறப்படும் பத்துக்கும் அதிகமான பொதுமக்கள் பொலீஸாருக்கு வாக்குமூலமளித்துள்ளனர் எனத் தெரிகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய விசேட பொலீஸ் குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

---

# சமாதானத்துக்கு எதிரான சக்திகளை முறியடிப்போம்!

## · விநாயகமூர்த்தி எம்.பி. அழைப்பு

வடமராட்சி,ஏப்.22

இன்று ஏற்பட்டுள்ள சமாதானம் நிரந்தர சமாதானமாக மாறவேண்டும் என நாம் அனைவரும் எதிர்பார்த்துக காத்திருக்கின்றோம். ஆனால், சமாதானத்தைக் குழப்பியடித்து நாட்டைச் சீர்குலைக்க ஒருசிலர் முயற்சித்து வருகின்றனர். இவ்வாறான முயற்சிகளை நாம் முறியடிக்க வேண்டும்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் 3 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வியாகுல அன்னை கல்வாரி திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

கரவெட்டி பங்குத் தந்தை அருட்தந்தை ஜே.பி.அன்ரனி அடிகளார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது:-

புதிய கல்வாரி திறந்துவைக்கப்பட்டதனால் இப்பகுதி மக்களுக்குத் தெய்வீக மணம் அதிகரிக்கும் நாட்டில் சமாதானம் ஏற்பட்டு அனைத்து மக்களும் சுபீட்சமாக வாழ வியாகுல அன்னையை நாம் அனைவரும் வேண்டுவோம் - என்றார்.

யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் ஜே.பி.ஈ.செல்வராஜா அடிகளார் கல்வாரியைத் திறந்துவைத்துப் பேசுகையில்:-

இங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அந்தோனியார் ஆலயத்தை நானே திறந்துவைத்தேன். இப்போது ஓய்வு பெற்றுச்செல்லும் காலத்தில் கல்வாரியைத் திறந்துவைக்கும் பேறு கிடைத்துள்ளது. இவற்றையிட்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

சமயங்கள் மக்களின் நல்வாழ்வுக்கே வழிகாட்டுகின்றன. சமயவழி வாழ்ந்து மக்கள் உயர்ந்துகொள்ள வேண்டும்.

திறக்கப்பட்டுள்ள சமாதானக் கதவுகள் திறந்தபடியே இருக்கவேண்டும். இதற்காக நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திக்கவேண்டும். பிரார்த்தனைமூலம் சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளலாம் - என்றார்.

ஆரம்பத்தில் கொழும்புத்துறை குருமட அதிபர் அருட்திரு.என்.பி.மங்களநேசன் அடிகளார் மந்திரித்து அபிஷேகம் செய்ய, யாழ். மனித முன்னேற்ற நடுநிலைய அதிபர் அருட்திரு. ஜே.ஜெயக்குமார் அடிகளார் கல்வாரி திருத்தலத்தைத் திரைநீக்கம் செய்துவைத்தார். (எ-173)

---

# வலயப் பாடசாலைகளில் சதுரங்கப் போட்டி முடிவுகள்

வலிகாமம் கல்வி வலய பாடசாலை மாணவர்களிடையே அண்மையில் நடைபெற்ற சதுரங்கப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளின் விவரங்கள் பிரிவு ரீதியாக வருமாறு:-

**15வயதுப் பிரிவு (ஆண்கள்)**

சுளிபுரம் விக்ரோரியாக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி,

**15வயது பிரிவு (பெண்கள்)**

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி,

**19வயது பிரிவு (ஆண்கள்)**

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம்.

**19வயது பிரிவு (பெண்கள்)**

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, சுளிபுரம் விக்ரோரியாக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம்.

(ஒ-152)

---

### வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த

# பார்வைக்குறைபாடு உடைய மாணவர்களுக்கு 'பிறெயிலர்' புத்தகங்கள் கிடைக்கும்

வலி.தெற்கு,ஏப்.22

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் கல்விபயிலும் கேட்டல் குறைபாடுடைய மாணவர்கள், பார்வைக்குறைபாடுடைய மாணவர்கள் 32 பேருக்கு விசேட கல்வி மாணவர்களுக்கான 'பிறெயில்' புத்தகங்கள் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளன.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கே இவை வழங்கப்படவுள்ளன.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கேட்டல் குறைபாடு உடைய 7 மாணவர்களும், பார்வைக்குறைபாடுடைய 9 மாணவர்களும் -

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் கண் பார்வைக் குறைபாடுடைய 12 மாணவர்களும், கேட்டல் குறைபாடுடைய ஒரு மாணவனும் -

மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் கண்பார்வைக் குறைபாடுடைய 3 மாணவர்களும் இதன் பொருட்டு இனங்காணப்பட்டு, வலிகாமம் கல்வி வலயத்தினின் சிபாரிசுடன் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (எ-152)

---

### நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு

# போதிய நிதி ஒதுக்கீடு இல்லை கிள்ளித்தெளிக்க வேண்டிய நிலை

## தெளிவுபடுத்துகின்றார் ரவிராஜ் எம்.பி.

நிதி விடயத்தில் எமது கைகள் கட்டப்பட்ட - கட்டுண்ட நிலையிலேயே உள்ளன.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ்.

யாழ். சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் திருமதி லு.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் ரவிராஜ் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய தேர்தல் முறையின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி சம்பந்தப்பட்ட உறுப்பினரின் மாவட்டத்தையே அபிவிருத்திசெய்யப் போதாமலுள்ளது. யாழ். மாவட்டத்தில் 11 தேர்தல் தொகுதிகள் உள்ளன. ஆனால், அரசு எமக்கு வழங்கும் நிதியை நாம் கிள்ளியே தெளிக்கவேண்டியுள்ளது.

எமக்கு வருடாந்தம் ஒரு குறிப்பிட்ட அளவு நிதியே ஒதுக்கப்படுகின்றது. முன்னைய தேர்தல் முறையின்கீழ் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். தனது தேர்தல் தொகுதிக்கு மட்டும் அவர் நிதியை வழங்கவேண்டியவராக இருந்தார். ஆனால், தற்போதைய விகிதாசார தேர்தல் முறையின்கீழ் யாழ்மாவட்டத்தில் 11 தொகுதிகள் உள்ளன. இதனால் சகல தொகுதிகளுக்கும் நாம் நிதியை கிள்ளியே வழங்கவேண்டியுள்ளது.

எனினும், யாழ்ப்பாணத்திலுள்ள கரையோரப்பிரதேசங்களில் சேதமடைந்துள்ள வீதிகளைச் செப்பனிடுவதற்கு நாம் 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளோம். யாழ்ப்பாணத்தில் பலகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக வதிகள் சேதமடைந்துள்ளன - என்றார். (எ-51)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
புதிய துணைவேந்தராக பதவியேற்றிருக்கும்
பேராசிரியர் கலாநிதி

## சு.மோகனதாஸ்

அவர்களை யாழ்மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களும் விவசாய சம்மேளன பிரதிநிதிகளும் வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றனர்.
துணைவேந்தர் அவர்களின் பணி மேன்மேலும்
சிறந்து விளங்க வாழ்த்துவதோடு,
அவர் நீடூழிகாலம் வாழவேண்டும் என
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெரும்பாக உத்தியோகத்தர்,
விவசாய சம்மேளனங்கள்,
கமநல சேவை நிலையம்,
நல்லூர்.

உதவி ஆணையாளர், உத்தியோகத்தர்கள,
கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(C-27509)

# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை தரம் 4C மாணவி

## செல்வி சபீனா புஸ்பராசா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்ப அங்கத்தவர்களின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யாழ்.கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

(17078)

# கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய செல்வி தனலட்சுமி தர்மலிங்கம் அவர்களின் சகோதரன்

## தர்மலிங்கம் பரம்சோதி

அவர்கள் 12.04.2003 சனிக்கிழமை அகாலமரணமானதையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை.

*உதவி அரசாங்க அதிபர் பணிமனை, நலன்புரிச் சங்கம்.*

(C/27511)


## விலை குறைவென்பது பொருளின் தரத்திற்குச் சான்றாகுமா?

இல்லவே இல்லை

நாம் வழங்கும் PI, PII தர IBM, DELL வகைக்கணனிகள் உங்கள் எவ்வகையான தேவைகளையும் நிறைவு செய்வதுடன், அரச உத்தியோகத்தர்களிற்கு தவணை முறையான விற்பனையையும் அளிக்கின்றது.

7000/= விருந்து உத்தரவாதத்துடன்

STP Your Partner in IT Solutions
54A, Palaly Road, Kantharmadam, Jaffna T.P. 2222674


# விளையாட்டு நிகழ்வுகள்

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக்களம் நடத்தும் மாகாண மட்ட மரதன் மற்றும் சைக்கிள் ஓட்டப்போட்டிகள் எதிர்வரும் 27ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ளன.

இதில் பங்குபற்றும் யாழ். மாவட்ட வீர, வீராங்கனைகள் 18 பேர் அடங்கிய குழு திருமலை செல்லவுள்ளதாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை, பெண்களுக்கான எல்லே சுற்றுப் போட்டிகளும், ஆண், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுபோட்டிகளும் எதிர்வரும் மே மாதம் 3ஆம், 4ஆம் திகதிகளில் மட்டக்களப்பில் நடைபெறவுள்ளன. (ஒ-5)

★ ★ ★

வலி.வடக்கு,ஏப்.22

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சிச சுற்றுப்போட்டியில் இன்று 4.45 மணிக்கு அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும். ஆட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்த விநாயகர் விளையாட்டுக்கழகமும் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகமும் விளையாடவுள்ளன. (ஒ-5-86)

## வாராந்த நிகழ்வு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெள்ளிக்கிழமைதோறும் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் எதிர்வரும் 25 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு ஞானச்சுடர் சித்திரை மாத இதழின் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

இதன் வெளியீட்டுரையை சிவஸ்ரீ கு.தியாகராஜக்குருக்களும் மதிப்புரையை யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலமும் நிகழ்த்துவார்கள். (ஒ-135-173)

**தனியார் கல்வி நிறுவனங்களின் இயக்குநர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்**

**25.04.2003**
காலை 10.00 மணி
இடம்:
யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கட்டடம்
(சத்திரச்சந்தி)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்.

(சி-27513)

# 'சிரான்' நிறைவேற்று பணிமனை ஆழியவளையில் திறந்துவைப்பு

வடமராட்சி கிழக்கு,ஏப்.22

'சிரான்' நிறைவேற்றுப் பணிமனை வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் கடந்த புதன்கிழமை திறந்துவைக்கப் பட்டது.

வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழுத்தலைவர் எஸ்.பொன்னம்பலம் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் ஈகச்சுடர்களை ஆஸ்திரேலியாவில் இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இணைப்பாளர் அ.பரராஜசிங்கமும், அமெரிக்காவில் இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இணைப்பாளர் எஸ்.விமலராசாவும் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் அரசியல்துறையைச் சேர்ந்த யாழ்மன்னன் ஏற்றிவைத்தார்.

பணிமனையின் பெயர்ப்பலகையினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் திலகர் திரைநீக்கம் செய்து வைத்தார்.

பணிமனையினை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் திரு.வி.ப. வேலாயுதபிள்ளை நாடாவினை வெட்டி திறந்துவைத்தார். உடனடி புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு யாழ்மாவட்டத்தில் ஆழியவளை கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-182)

## கார் தடம்புரண்டு இருவர் காயம்!

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்குச் சென்றவர்கள் பயணித்த கார் சாவகச்சேரிப் பகுதியில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் சாரதி உட்பட இருவர் படுகாயமடைந்தனர்.

தும்பளையில் இருந்து பணியின் நிமித்தம் வவுனியாவில் வசித்துவரும் வவுனியா மக்கள் வங்கி உத்தியோகத்தரும் காரை ஓட்டிச் சென்றவருமான செல்வராசா சந்திரகுமாரன் (வயது30) அவரது மாமியாரான நவரட்ணராசா பத்மாசினி (வயது 52) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

அதில் பயணம் செய்த சந்திரகுமாரனின் மனைவி, பிள்ளைகள் தெய்வாதீனமாக காயமின்றி தப்பித்துக்கொண்டனர்.

படுகாயமடைந்த இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-15)


## இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
*பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற*

### S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 8மணிமுதல் மாலை 8மணிவரை)

**ஸ்ரான்லி லொட்ஜ்**
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில்) (17081)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

போர்க்கால சூழ்நிலையில் யாழ்.மக்களின் சுகவாழ்விற்கு அளப்பரிய சேவையாற்றியவரும் எமது கிராமமாகிய அச்சுவேலியில் உள்ள அரசினர் வைத்தியசாலை அபிவிருத்தியில் அர்ப்பணிப்புடன் தன் சேவைக்காலத்தில் வெற்றி நடைகொண்டு செயற்பட்டவரும் முன்னாள் பணிப்பாளருமாகிய
*எமது அன்பிற்கும் பெருமதிப்புக்குமுரிய*
உயர்திரு.லயன் வைத்திய கலாநிதி

## K.J.சிவபாதம் ஐயா

அவர்கள் மீண்டும் யாழ்ப்பாண சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளராக நியமனம் பெற்றமையையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைவதுடன் அவர் மேலும் சிறந்த சேவை செய்ய வேண்டுமென முழுமனதுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவரை வாழ்த்திச் சிறப்பிப்போர்:
லாலா சோப் நிறுவன ஸ்தாபகர்
அச்சுவேலி (C-27507)

# பணிநிலை வேண்டுகை

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், நடுவப்பணியகத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட பணி நிலைகளில் பணியாற்றக்கூடிய தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- திட்ட முகாமையாளர் (PROJECT MANAGER)
- தொழில் நுட்பவியலாளர் (கட்டடம்)
- குடிசார் எந்திரவியலாளர் (CIVIL ENGINEER)
- கணனி தரவு நிரற்படுத்துநர்

தகுதியானவர்கள் எதிர்வரும் 30-04-2003 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

- வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்**
நடுவப் பணியகம், கண்டிவீதி, கிளிநொச்சி.

(17073)

சைவ வித்தியா விருத்திச் சங்கம்

# ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவித்தல்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 2003.05.11 ஆம் நாள் நடைபெறும்.

அங்கத்தவர்களை தமது உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேன். புதிதாகச் சேரவிரும்புவோர் எமது அலுவலகத்தில் உரிய படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.

பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 2003.04.30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.*

(சி-27508)

**சோ.பத்மநாதன்**
***செயலாளர்.***


PRINCE
துருபிடிக்காத உலோக கிச்சன் சின்க்

பிரின்ஸ்
நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்
பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.




ஏக விநியோகஸ்தர்கள்:
செ்ன்ற் அந்தனீஸ் ஹாா்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
காட்சியறை: 516, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 324261-5, 327283-5, 436779 பெக்ஸ்: 446554
295, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 575666

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# பேச்சுக்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைந்த முக்கியமான உப குழுக்களை பேச்சுக்குழுக்களால் ஸ்தாபிக்க முடிந்தது.

சர்வதேச சமூகத்தை அணுகும் விடயத்தில் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து ஒன்றாகவே பணியாற்றுவது என பேச்சுகளின் ஆரம்ப சுற்றிலேயே தீர்மானிக்கப்பட்டது. அத்தகைய கூட்டு செயற்பாட்டுக்கு 2002 நவம்பர் 25ஆம் திகதி ஒஸ்லோவில் நடைபெற்ற உதவி வழங்வோர் மாநாடு போன்றது அசலான அரங்கு என்பது தெளிவாயிற்று.

வழமைநிலையை ஏற்படுத்துவதற்கும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கும் சர்வதேச உதவியைப் பெற்றுக்கொள்ளும் விடயத்தில் விடுதலைப் புலிகள் நேர்மையுடனும் நல்லெண்ணத்துடனும் இலங்கை அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்கினர். கூட்டு வேண்டுகோள்கள் மற்றும் திட்டங்களைத் தயாரிப்பதில் விடுதலைப் புலிகள் இன்றுவரை அரசுடன் கைகோர்த்து செயற்பட்டுள்ளனர். எங்களின் நல்லெண்ணம் மற்றும் நம்பிக்கைக்கு மத்தியிலும், பொருளாதார உதவிகளுக்காக சர்வதேச சமூகத்தை நாடும் விடயத்தில் எங்கள் இயக்கத்தை ஒதுக்கும் வழிமுறையைத் தங்களின் அரசு நாடியிருக்கின்றது.

ஜப்பானில் ஜூனில் நடைபெறவிருக்கும் பிரதான உதவி வழங்குவோர் மாநாட்டுக்கு ஆயத்தம் செய்வதற்காக 2003 ஏப்ரல் 14 ஆம் திகதி வாஷிங்ரனில் நடைபெற்ற முக்கிய உதவி வழங்குவோர் மாநாட்டில் விடுதலைப் புலிகள் தவிர்க்கப்பட்டதை நாங்கள் குறிப்பிடுகின்றோம்.

சமாதானத்தின் பிரதான பங்காளிகளாகவும், தமிழ் மக்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளாகவும் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ்த் தேசத்தின் பொருளாதார சமூக நலன்களைப் பாதிக்கும் முக்கிய விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலில் ஒதுக்கியமை பரஸ்பர நம்பிக்கையை மோசமாகப் பாதிக்கும் செயல் என்றே நாம் கருதுகின்றோம்.

தமது நாட்டில் தடைசெய்யப்பட்ட ஓர் இயக்கத்தின் பிரதிநிதிகளைத் தங்கள் நாட்டுக்கு அழைப்பதில் அமெரிக்காவுக்கு சட்டரீதியான நெருக்கடிகள் உள்ளன என்பது உங்கள் அரசுக்கும் - அதே சமயம் எமது அனுசரணையாளர்களான நோர்வேக்கும் - நன்கு தெரியும். இந்தச் சூழ்நிலையில் உதவும் நாடுகள் மாநாட்டுக்கு முன் ஆயத்தம் செய்யும் இந்த முக்கிய நிகழ்வில் விடுதலைப் புலிகளும் பங்குபற்றுவதற்கு வசதியாகப் பொருத்தமான இடம் தெரிவுசெய்யப்பட்டிருக்க முடியும். ஆனால், அப்படிச் செய்யாமல் உங்கள் அரசு தவறியிருப்பது, இது வேண்டுமென்றே தவிர்க்கப்பட்ட நடவடிக்கை என்ற சந்தேகத்தை எமக்கு ஏற்படுத்தியிருக்கின்றது.

புலிகள் இயக்கம் ஒதுக்கப்பட்டிருப்பது சமாதான நடவடிக்கைகள் மீது எமது மக்களுக்கு இருந்த நம்பிக்கையை பெரிதும் பாதித்திருக்கின்றது.

உங்களது அரசு பதவியேற்ற கையோடு இருபது வருடகால கொடூர பேரழிவு யுத்தத்துக்கு முடிவைக் காணும் வகையில் எமது இயக்கத்துடன் யுத்தநிறுத்த உடன்பாடு ஒன்றைச் செய்தபோது மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்களவு நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டதை நீங்கள் அறிவீர்கள். நோர்வே அனுசரணையுடன் இருதரப்பும் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பித்தபோது எதிர்பார்ப்பு மேலும் உயர்ந்தது.

வடக்கு - கிழக்கு மக்கள் - குறிப்பாக யுத்தத்தினால் நாட்டுக்குள் இடம்பெயர்ந்து நலனோம்பு நிலையங்களிலும், அகதி முகாம்களிலும் தஞ்சம் புகுந்துள்ள பத்து லட்சம் மக்கள் - அன்றாடம் எதிர்நோக்கும் உடனடி, அவசரப் பிரச்சினை குறித்து சமாதான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படும் என்ற நியாயமான எதிர்பார்ப்பு விசேடமாக இருந்தது.

அதனால்தான் வழமை நிலையை ஏற்படுத்துவதற்கு வழி செய்கின்ற விதத்தில் தமிழர்களின் வீடுகள், பாடசாலைகள், வழிபாட்டு மையங்கள், பொதுக் கட்டடங்களை ஆக்கிரமித்துள்ள ஸ்ரீலங்கா துருப்புகள் அங்கிருந்து வெளியேறுவதை தேவைப்படுத்துகின்ற முக்கிய நிபந்தனை யுத்தநிறுத்த உடன்பாட்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

துருப்புகளை வெளியேற்றுவது தொடர்பாக இணக்கம் காணப்பட்ட கால அட்டவணை இருக்கத்தக்கதாக, அந்தக் காலம் கடந்தும் களநிலைமையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

எங்கள் மக்களின் தொடரும் இந்த அவலம் குறித்த விடயத்தை உங்கள் அரசுடனான ஒவ்வொரு சுற்றுப் பேச்சிலும் நாம் திரும்பத் திரும்ப எழுப்பினோம். இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக உங்கள் தரப்புப் பேச்சு குழுவினர் மீண்டும் மீண்டும் தந்த உறுதிகள் நிறைவேறாமல் போயின.

எமது மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான சமஷ்டி முறைக்கு இணங்கியது போன்ற முக்கிய விடயங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களினால் பேச்சுகள் இதுவரை வெற்றிகரமாக உள்ளன.

ஆனால், இந்த முன்னேற்றம் வழமை நிலையை மீள ஏற்படுத்துவது தொடர்பான யுத்தநிறுத்த ஏற்பாடுகள் மற்றும் பின்னர் பேச்சில் காணப்பட்ட இணக்கங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்த மறுத்ததன் மூலம் எமது மக்கள் தொடர்ந்து எதிர்கொண்டுவரும் கஷ்டங்களை நீக்குவதில் எந்த முன்னேற்றத்தையும் தராத நிலையுடன் எவ்வகையிலும் ஒத்துப்போகவில்லை.

இதன் விளைவாக தமிழ் மக்கள் மத்தியில் - குறிப்பாக தங்களின் உடனடித் துயரங்கள், சமாதான நடவடிக்கைகளால் நீங்கும் என்ற நம்பிக்கையுடியோடு இழந்த இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் - பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.

துப்பாக்கிகளின் நிசப்தம் காரணமாக அமைதி நிலவினாலும் தமிழர் பிரதேசத்தில் வழமைநிலை மீளவில்லை. பத்தாயிரக் கணக்கில் அரசுத் துருப்புகள் எங்கள் நகரங்கள், மாநகரங்கள் மற்றும் குடியிருப்புப் பிரதேசங்களைத் தொடர்ந்து ஆக்கிரமித்திருப்பதால் எமது மக்கள் நடமாட்ட சுதந்திரத்தை இழந்து திணறுகின்றார்கள். சமாதான காலத்தில் தமிழர் நிலத்தில் - குறிப்பாக குடிசன நெருக்கமான யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்த எமது மக்கள் தங்களது வீடுகளுக்குத் திரும்புவதை தடைசெய்யும் இத்தகைய மிகப் பெரிய இராணுவ ஆக்கிரமிப்பு நீதியற்றதும் நியாயமற்றதுமாகும்.

முழுநாட்டையும் பொதுக் காரணம் வறுமையே என்று உங்கள் அரசு சர்வதேச அரங்குகளில் தொடர்ந்து முன்வைத்து வருகின்றது. தங்கள் அரசின் ஐக்கிய பொருளாதாரக் கொள்கையை வெளிப்படுத்தும் 'இலங்கையை மீளப்பெறுதல்' ஆவணத்தின் அடிப்படை சாரமாக வறுமை ஒழிப்பு உத்திகளே குறிப்பிடப்பட்டுள்ளன.

வறுமையும் வறுமை ஒழிப்புமே தங்கள் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை நோக்கின் மத்திய விடயமாக அமைவதை வெளிப்படுத்தியுள்ள 'இலங்கையை மீளப்பெறுதல் ஆவணம்' வறுமைக்கு அடிப்படை ஏதுவான விடயங்கள், யுத்தத்தின் தாக்கம், வடக்கு - கிழக்கில் நிலவும் தனித்துவமான பேரழிவு நிலை ஆகியவற்றை ஆராயத் தவறிவிட்டது.

தமிழர் பிரதேசத்தின் யதார்த்த நிலைமை, தென்னிலங்கையின் நிலைமையிலிருந்து முற்றிலும் வேறானது என்பதே எமது கருத்து. கொடூரப் போரின் முழு உக்கிரத்தையும் எதிர்கொண்டவர்கள் தமிழர்கள். இருபது வருடகால கடுமையான - இடைவிடாத - யுத்தத்தினால் வடக்கு - கிழக்கின் கட்டுமானம் மீளமைக்க முடியாத அளவுக்கு அழிக்கப்பட்டுள்ளது. மக்களின் இடம்பெயர்வு மற்றும் இராணுவக் கட்டுப்பாடுகளால் தமது ஜீவனோபாயத்தைக்கூட மேற்கொள்ள முடியாத மக்களின் இயலாத்தன்மை ஆகியன மேற்படி பிரமாண்டமான பேரழிவை மேலும் அதிகரிக்கச் செய்து வடக்கு - கிழக்கு மக்களிடையே பெரும் துயரையும் மோசமான வறுமையையும் ஏற்படுத்தியுள்ளன. தொடர்ந்த இடம்பெயர்வுகள் மக்களின் கொஞ்ச நஞ்ச சேமிப்பையும் இழக்கச் செய்து தங்கள் வாழ்க்கையைத் தாங்களே மீளமைத்துக்கொள்ளும் அவர்களின் வலுவையும் இழக்கச் செய்துள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்கள் வாழ்வை மீளப்பெற அவசர உதவிகள் தேவைப்படுகின்றன. அத்தியாவசிய சேவைகள் மீள ஸ்தாபிக்கப்படுவது அவர்களின் தேவையாகின்றது. தமது வழமையான வாழ்க்கைக்கு அவர்கள் திரும்புவதற்கு வீதிகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், வீடுகள் போன்ற கட்டுமானங்களை மீளமைப்பது அத்தியாவசியமாகின்றது.

தென்னிலங்கையில் நிலவும் வறுமை சுயமாக ஏற்படுத்தப்பட்டது. தமிழர் தேசியப் பிரச்சினையைக் கையாள்வதில் முன்னைய அரசுகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

---

**UNHCR நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட**
**சித்திரக் கண்காட்சி - 2002**

உலக அகதிகள் தினத்திற்காக UNHCR நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட சித்திரம் வரைதலில் பங்குபற்றிய சிறுவர்கள் யாவருக்கும் எதிர்வரும் 24.04.2003 வியாழக்கிழமை அன்று 3 மணிக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படவுள்ளமையால், பங்குபற்றிய அனைத்துச் சிறுவர்களும் மேற்குறிப்பிட்ட தினத்தன்று தவறாது UNHCR காரியாலயத்துக்கு சமுகந்தரவும்.

**UNHCR**
223, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(17088)

---

## மரண அறிவித்தல்கள்

### கணபதி மாணிக்கம்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி மாணிக்கம் நேற்று (21.04.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2003) செவ்வாய்க்கிழமை இல.39/1, சென்.பற்றிக்ஸ் வீதி, இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 4.00 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

*தகவல்:*
*ஆ.கிளறிஸ்ரன் (ஜோர்ச்),*
*39/1, சென் பற்றிக்ஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(C/27515)
மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்

### திருமதி சுந்தரம்மா மகாதேவா

காரைநகரைப் பிறப்பிடமாகவும் 105, 4ஆம் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம்மா மகாதேவா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அ.ச.மகாதேவா அவர்களின் அன்பு மனைவியும் ஜெயதேவன் (உரிமையாளர், சண்முகா பார்மஸி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்), கௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி ஞானேஸ்வரி ஜெயதேவனின் அன்பு மாமியாரும் அருட்குமரன், அஜந்தன், ரமணியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுகுணா, விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புப் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 105, 4ஆம் குறுக்கு வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (22.04.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெற்றுப் பூதவுடல் 3 மணிக்கு (பழைய நேரம்) தகனக் கிரியைகளுக்காக யாழ்.வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்:
ம.ச.ஜெயதேவன்.
(மகன்)
*105, 4ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*
(17090)

### குமாரவேலு கந்தையா

காரைநகர், வெடி அரசன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு கந்தையா அவர்கள் நேற்று (21.04.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இட்சுமியின் அன்புக் கணவரும் நடராஜாவின் (காணிப் பதிவகம், யாழ்.) அன்புத் தந்தையும் கேசவன் (ஆசிரியர் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜனுசியா (Bit 1st Year 2nd Semester Student at IIS) ஆகியோரின் அன்புப் பேரனும் சின்னம்மா, காலஞ்சென்றவர்களான செல்லையா, தம்பையா, தங்கம்மா, நாகம்மா, மாணிக்கம் ஆகியோரின் சகோதரரும் கணபதிப்பிள்ளை, கதிரமலை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2003) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க.நடராசா
(மகன்)
*வெடிஅரசன் வீதி,*
*காரைநகர்.*
(17087)

### சின்னக்குட்டி இராசேந்திரம்,
### திருமதி இராசேந்திரம் பாக்கியலட்சுமி

முல்லைப்படி, பளையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி இராசேந்திரம், திருமதி இராசேந்திரம் பாக்கியலட்சுமி ஆகியோர் 16.04.2003 புதன்கிழமை அன்று பிரான்ஸில் அகாலமரணமானார்கள்.

இவர்கள் காலஞ்சென்ற சின்னக்குட்டி மற்றும் பொன்னம்மாவின் அன்புப் பிள்ளைகளும் இராஜேஸ்வரி, புவனேஸ்வரி (கொழும்பு), தர்மராஜா (பிரான்ஸ்), யோகேஸ்வரி (கனடா), ஜெகதீஸ்வரி (கனடா), கிருபராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் தாய், தந்தையரும் சூரியகுமார் (பாரின்); கோகிலாம்பிகை (கொழும்பு), பாலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் மாமன், மாமியும் நாகரத்தினத்தின் (இந்தியா) சகோதரியும் செல்லத்துரை (பிரான்ஸ்), சிவகுரு (அக்கராயன்), இராமலிங்கம் (மட்டுவில்) ஆகியோரின் சகோதரர்களும் மதியழகன் (கனடா), மதிவாணி (பல்வைத்தியர்), மதிசைலீஜா (கனடா), மதிசிந்துஷா (கொழும்பு); மதிநிஷாந்தன் (கனடா), நிறோசன் (கனடா), இராஜலஷ்சன் (கனடா), பானுஜா (கனடா), காமிஷா (கனடா), கிசோக்கா (கொழும்பு), டிலானி (கொழும்பு), உமா (கனடா) ஆகியோரின் பேரன், பேர்த்தியும் ஆவார்கள்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*A.G2, St. James Flats,*
*Mutwal,*
*Co - 15.*
*T.P. : 01 - 524400*
(17084)
தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

**வேலையாட்கள் தேவை**

பிரபல்யம் வாய்ந்த சைவ உணவகம் ஒன்றுக்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.

விவரம்

★ நெறியாளர்
★ சமையல் வல்லுநர்கள்
★ உதவியாளர்கள்
★ சுவீற் மேக்கர்
★ ரீ மேக்கர்
★ உணவு பரிமாறுவோர் (சப்ளையர்)
★ பில்க்கிளாக்
★ மேற்பார்வையாளர்கள்
★ பாதுகாப்பு உத்தியோகத்தர்
★ களஞ்சியக் காப்பாளர்

ஆகிய பதவி வெற்றிடம் இருப்பதால் விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:
❊ முன்னனுபவம் விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.
❊ சம்பளம் உடன் பேசித் தீர்க்கப்படும்.

வி.இலக்கம்: 1856
உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.
(17079)

**லக்சுமி** இணுவில்
**CROUCHING TIGER HIDEN DRAGON**
காட்சி: 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)
இன்றும் நாளையும் மட்டும்.
பயங்கர கராட்டி சண்டை நிறைந்த படம்.

**நிறஞ்சனாஸ்**
விஜய், சினேகா நடித்த
**வசீகரா**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
**JURASSIC PARK - 3**

**வின்சர்** அச்சுவேலி
சரத்குமார், சுரேஸ்கோபி, தேவயானி, அபிராமி, செந்தில், கவுண்டமணி நடித்த
**சமஸ்தானம்** (ரீலைஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
T.P.: 070 212223
(C-27479)

**ராஜா** யாழ்ப்பாணம்
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன், ரோஜா, வடிவேல் நடித்த
**அரசு**
10.30, 2.30, 6.30, 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்
சில தினங்கள் மட்டும்
அஜித், சிம்ரன், சுஜாதா, செந்தில் நடித்த
**அவள் வருவாளா** (ரீலைஸ்)
காட்சிகள் தினசரி:
11.00, 3.00, 7.00 (பு.நே.)

---

**பிற்போடப்பட்டுள்ளது**

உடற்கல்வி மாணவர்மன்ற வளர்ச்சி நிதிக்காக இன்று (22.04.2003) செவ்வாய்க்கிழமை நடத்தப்படவிருந்த மாபெரும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் 22.05.2003 வியாழக்கிழமை அன்று சீட்டிழுப்பு இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

உடற்கல்வித்துறை
யாழ். பல்கலைக்கழகம்.
(17085)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**முருகன் கனகையா**



பாசமுடன் எமைவளர்த்த பரிவான அப்பாவே!
நேயமுடன் எம் வாழ்வை வளமாக்கி வைத்தீரே!
ஆசையுடன் பிள்ளைகள் நாம் நிதம்.
உம்மைத்தொழுவோமே!
ஈசனுடன் சேர்ந்து எமக்கருள் செய்வீரே!

இவ்வுலகு : 1934.06.10
மறுவுலகு : 2003.03.23
*நாவற்குழி கிழக்கு, கைதடி.*

தகவல்:
மனைவி,
ஆனந்தமுருகன்,
அருளானந்தராசா
(மகன்மார்).
(17089)

# மணலாறில் இராணுவ வீரர் விடுதலைப்புலிகளினால் கைது!

கொழும்பு,ஏப்.22

மணலாறு, ஜயசிங்கபுர முன்னரங்க பாதுகாப்பு நிலையிலிருந்து வெளியேறிச்சென்ற இராணுவ வீரர் ஒருவர் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று இராணுவம் தெரிவிக்கின்றது.

கடந்த 19ஆம் திகதி காலை 10 மணியளவில் சீருடையுடன் சென்ற இந்த இராணுவவீரர் நிவித்திகலை பகுதியைச் சேர்ந்தவராவார். அவருக்கு வழங்கப்பட்ட துப்பாக்கியும் தோட்டாக்களும் கொக்குத்தொடுவாய் முன்னரங்கப் பகுதி பாதுகாப்பு வலயத்தில் ஒரு மரத்தின்கீழ் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன எனக்கூறப்படுகிறது.

இந்த இராணுவவீரர் புலிகளினால் கைதுசெய்யப்பட்டிருப்பது குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் இராணுவம் அறிவித்திருக்கிறது.

புலிகளினால் முன்னர் கைது செய்யப்பட்ட ஓர் இராணுவ வீரரும் பொலீஸ்காரரும் மன்னிப்பளித்து விடுவிக்கப்பட்டது தெரிந்ததே.

# வவுனியா ஆதார வைத்தியசாலையில் நேற்று அடையாள வேலைநிறுத்தம்

வவுனியா ஆதார வைத்தியசாலையின் மருத்துவர்களும் ஊழியர்களும் நேற்று அடையாள வேலை நிறுத்தம் ஒன்றினை மேற்கொண்டனர். மூன்று அம்சக் கோரிக்கையை முன்வைத்து மேற்கொள்ளப்பட்ட இவ்வேலை நிறுத்தம் காரணமாக நோயாளர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

மாவட்ட வைத்திய அதிகாரியின் இடமாற்றத்தை ரத்து செய்யுமாறும், அம்புலன்ஸ் வண்டி ஒன்றை உடன் வழங்குமாறும், சேவை நீடிப்பில் இருக்கின்ற பிரதிமாகாண சுகாதாரப் பணிப்பாளரை இடம்மாற்றுமாறும் கோரியே இவ்வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. காலை 8 மணிக்கு வேலைநிறுத்தம் ஆரம்பமானதால் வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்கள் மருந்து எடுக்க முடியாமல் திண்டாடினார்கள். எனினும், அத்தியாவசிய வைத்தியசேவைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை, வவுனியாவில் இருந்து மன்னாருக்குச் சென்ற 39 வயதான யூட்ஷன் என்பவர் வீதி விபத்துக் காரணமாக மரணமானார். மேலதிக விசாரணையை வவுனியா பொலீஸார் மேற்கொண்டுள்ளனர்.

## ஐ.தே.கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்கள் ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம்.அஸ்வர், ஏ.ஆர்.எம்.ஏ.காதர் ஆகியோர் கடந்த 15ஆம் திகதி ஹெலி மூலம் மூதூருக்குப் பறந்து சென்றனர்.

மூதூரில் அக்கரைச்சேனை பள்ளி வாசலில் அமைச்சர்கள் கலந்துகொண்ட கூட்டமொன்றும் அன்றைய தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருமலை மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பியான எம்.ஏ.எம்.மஹ்ரூப்பும் கலந்துகொண்டார். இக்கூட்டத்தில் மஹ்ரூப் எம்.பி. ஆற்றிய உரையினால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஐ.தே. கட்சி எம்.பிமஹ்ரூப்பின் உரையை வன்மையாகக் கண்டித்தனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூதூருக்கு வந்து சமரசம் செய்யும் வரை அமைச்சர் ரவூப் ஹக்கீம் கொழும்பு திரும்பக்கூடாது என்றும் வற்புறுத்தினர்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆதரவாளர்களின் வற்புறுத்தலுக்கிணங்க கடந்த 15ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் 20ஆம் திகதிவரை மூதூரிலேயே தங்கியிருந்தார். இப்போது திருமலையில் தங்கியிருக்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீம், அச்சத்தால் இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம் மற்றும் தமிழ்க் குடும்பங்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

இவ்வாரத்தில் திருகோணமலைக்கு விஜயம் செய்யும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடற்படைத் தளத்தில் நடைபெறும் விசேட வைபவமொன்றிலும் கலந்துகொள்வார் என்று பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் திருமலையில் தங்கியிருக்கும் சமயம், மூதூர் மற்றும் பிரதேசங்களில் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலையைத் தணித்து, இனநல்லுறவை வளர்ப்பதற்கான வழிவகைகள் குறித்தும் ஆராய்வார்.

பிரதமருடனான சந்திப்பில் இணக்கம் ஏற்பட்ட பின்னரே ஹக்கீம் திருமலையை விட்டுக் கொழும்புக்குப் புறப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம)


## விற்பனைக்குண்டு



வாகன அனுமதிப்பத்திரமும், காப்புறுதியும் இல்லாமல் செலுத்தக்கூடிய 49CC HERO STREAM மோட்டார் சைக்கிள் எம்மிடம் விற்பதற்கு உண்டு.

விலை ரூ. 41, 900/- மட்டுமே.

அத்துடன்

No.01 தரத்திலான தேயிலையும் விற்பனைக்குண்டு.

விலை 500g பைக்கற் ரூ. 87.50 மட்டுமே.

S.T.C. அரச காட்சியறை

இல.7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (17067)

## இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்

இயற்கை மூலிகை சிகிச்சை மூலம் ஆஸ்துமா, உடல் பருமன், உடல் மெலிவு, சலரோகம், மூலவியாதி, முகப்பரு, இளநரை, தலைமுடி உதிர்தல், மாதவிடாய்ப் பிரச்சினைகள், தலையிடி, வாதம், நாரி உளைவு, கைகால் விறைப்பு, தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்க விளைவுகளுமின்றி பரிபூரணமாக குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

ஆண்மைக் குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

Dr.R.K.நவனீதன் DYNS, SMP, NC.

(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)

இல. 54, மனிக்கூட்டு வீதி,

யாழ். பயனியர் விடுதி

(வெலிங்ரன் சந்திக்கு அருகில்). யாழ்ப்பாணம்.

யோகாசனப் பயிற்சி வகுப்புகளுக்கு பதிவுகள் நடைபெறுகின்றன

முகாம் நடைபெறும் நாள்கள்:

ஏப்ரல் 21ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை. (17071)


## பதிவுகளை மேற்கொள்ள கொழும்பு வருமாறு அழைப்பு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்பிராந்திய நிலையத்தின் முகாமைத்துவமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களை நாளைமறுதினம் வியாழக்கிழமை கொழும்பில் உள்ள தலைமையகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் -

விஞ்ஞானமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களை கொழும்பில் உள்ள பிராந்திய நிலையத்திற்கு வருகைதருமாறும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்குடாநாட்டுக்கான தரைப்பாதை திறந்த பின்னரும், இப்பதிவுகளை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளாது கொழும்பில் மேற்கொள்வதால் தாம் வீண் செலவீனங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது. (எ-8)

## வடமராட்சியில் 10 பாடசாலைகளில் சத்துணவுத் திட்டம்

தரம் 1 மாணவர்களுக்கான சத்துணவு வழங்கும் திட்டத்தின் கீழ் வடமராட்சி கல்வி வலயத்தில் 10 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

அடுத்த தவணையிலிருந்து போசாக்கு உணவு வழங்கும் திட்டம் அப்பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

ஒரு மாணவருக்கு நாள் ஒன்றுக்கு 15ரூபா இத்திட்டத்திற்கு வழங்கப்படவிருக்கின்றது.

தெரிவு செய்யப்படுகின்ற ஒப்பந்தகாரர் மூலம் இவ்வுணவுகள் விநியோகிக்கப்படும்.

உணவின் தரம், சுகாதாரத் தன்மை ஆகியவற்றினை மேற்பார்வை செய்வதற்கு அதிபர், உபஅதிபர், வகுப்பாசிரியர், பெற்றோர்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழுக்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் அமைக்கப்படவுள்ளன. (ஒ-182)

## மன்னாரில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச்சாலையில் தடுத்துவைப்பது நல்லது என்றும் - அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரினர்.

இதை ஏற்றுக்கொண்ட நீதிவான் நால்வரையும் மன்னார் சிறைச்சாலையில் தடுத்துவைக்கும்படி உத்தரவிட்டார். (ம-3)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும்.

'தீச்சுவாலை' நடவடிக்கை முறியடிப்பின் வெற்றிச்சமர் இடம்பெற்ற 2ஆம் ஆண்டு நிறைவை ஒட்டியும், ஆனையிறவு வெற்றிப் பெருவிழாவை யொட்டியும் எதிர்வரும் 28ஆம் திகதி காலை 7 மணி முதல் 10.30 மணி வரை 'புலிகளின் குரல்' வானொலியில் விசேட நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படவிருக்கின்றன. (ம-3)


பெற்றோர் கவனத்திற்கு

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தையிட்டு கவலைப்படுகிறீர்களா?

கவலை வேண்டாம் இதோ.. இதோ..

நாளை ஆரம்பம் பிரிவு 4

O/L DAY CLASS

ஆரம்பம்:23.04.2003 (8.30 - 2.30)

✳ பிரிவு 3இற்கு ஒருசில அனுமதிகள் வழங்கப்படும்.

✳ பிரிவு 5 அதோ மிக வெகு விரைவில்

விக்னா

கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ். (17080)

வேகமான விற்பனையில்

A/L GENERAL ENGLISH

PAST PAPERS (2001, 2002) AND MODEL PAPERS (With Answers)

தொகுப்பு:

த. ஞானேந்திரன்

B.Com.(Hons), M.M.Spl., H.N, Dip. in Acc.

பூபாலசிங்கம், சிறிலங்கா, சுப்பிரமணியம், துர்க்கா, சிதம்பரப்பிள்ளை, பிரியங்கா, நாவலர், அறிவமுது. (17086)


# பேச்சுக்களில்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

(ஐ.தே.கட்சி மற்றும் ஸ்ரீல.சு.க. இரண்டு அரசுகளும் அடங்கலாக) பின்பற்றிய - விபரீத விளைவை ஏற்படுத்திய - கொள்கைகளே அதற்குக் காரணம். தமிழ் மக்களுக்கு எதிராக நியாயமற்ற போர் தொடுக்கும் தனது வெறிப் போக்கினால் சிங்கள நாடு சகல தேசிய வளத்தையும் பயனற்ற இலட்சியத்துக்காக வீணாக்கியது. 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற கேலிக்குரிய தனது கொள்கையை நிலைநிறுத்துவதற்காக முன்னைய அரசு பெரிய அளவில் திரட்டிய கடன் சர்வதேச ரீதியில் அளவுக்கதிகமான கடனிறு நிலையை ஏற்படுத்தியுள்ளது.

தெற்கின் பொருளாதார நிலைமை, அரச நிதியைத் தவறாக நிர்வகித்தல், மோசமான ஆட்சி, நிர்வாக ஊழல்கள் ஆகியவை காரணமாக மேலும் மோசமடைந்து இருக்கின்றது.

எனவே, உள்கட்டுமான அமைப்புகளின் உச்சப் பேரழிவுகள், மோசமான வறுமைநிலை ஆகியவற்றின் அளவிலும் நோக்கிலும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கின் நிலைமை தெற்கிலும் நிலவும் நிலைமையிலிருந்து பெருமளவில் வேறுபட்டது.

வேறுபட்ட இந்த யதார்த்த நிலையை உதாசீனப்படுத்திவிட்டு, நாடு முழுவதற்குமான பொதுக் காரணி வறுமையே என்று முன்னிலைப்படுத்தி அதற்கு பொதுவழிமுறை ஒன்றின் மூலம் தீர்வு காண உங்கள் அரசு முயல்கின்றது.

இந்த வழிமுறை வடக்கு - கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் தீவிரத்தைக் குறைத்து மதிப்பிடும் போக்காகும்.

அரசின் "இலங்கையை மீளப்பெறல்" ஆவணம் வடக்கு - கிழக்குக்கான - அடையாளப்படுத்தப்பட்ட - எந்த இலக்கையும் அடியோடு கொண்டிருக்கவில்லை. அரசின் கொள்கையை நிலைநிறுத்துவதற்காக அதில் முன்வைக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் வடக்கு - கிழக்கை முற்றாகப் புறந்தள்ளிவிட்டு தென்னிலங்கை பற்றி மட்டுமே அதிகம் கவனிக்கின்றன. ஆனால், சர்வதேச சமூகத்திடம் நிதி பெறுவதற்கான தேசிய உத்தியாக இதுதான் முன்வைக்கப்படுகின்றது. இதன்மூலம் வடக்கு - கிழக்கின் முக்கிய அபிவிருத்திக்கு அரசிடம் பரந்த உத்தி ஏதும் இல்லை என்பது புலனாகின்றது.

ஏனைய பிரதேசத்திலிருந்து வேறுபடும் வடக்கு - கிழக்கின் வறுமை நிலை குறித்து கவனமெடுப்பதில் வறுமை ஒழிப்பு உத்தி தவறிவிட்டது.

சர்வதேச உதவியைப் பெறும் விடயத்தில் எல்லாப் பிரதேசங்களிலும் புனரமைப்புப்பணி மேற்கொள்ளப்படவேண்டும் என்று தங்கள் அரசு கூறுகின்றது. இதன் மூலம், கடந்த மூன்று தசாப்தகால இராணுவப் போக்குக் கொள்கைகளால் வடக்கு - கிழக்கின் கட்டுமானங்களுக்கு ஏற்பட்ட முழு அழிவை மூடிமறைக்கின்றது.

நாங்கள் மேலே சுட்டிக்காட்டியது போன்று -

வாஷிங்ரனில் நடைபெற்ற உதவி வழங்கல் தொடர்பான முக்கிய மாநாட்டில் புலிகள் சேர்த்துக்கொள்ளப்படாதமை -

யுத்தநிறுத்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட விதிகள், நிபந்தனைகள் நடைமுறைப்படுத்தப்படாமை -

பல்லாயிரக்கணக்கில் நாட்டுக்குள் இடம்பெயர்ந்த தமிழர்களின் கஷ்டங்கள், அவலங்கள் தொடர்கின்றமை -

தமிழரின் நகரங்களிலும் குடியிருப்புப் பிரதேசங்களிலும் சிங்கள இராணுவத்தின் தீவிர ஆக்கிரமிப்பு -

வடக்கு-கிழக்கு தமிழரின் உண்மையான இழப்புக்கள், மோசமான வறுமை நிலை ஆகியவை அரசின் ஐக்கிய பொருளாதாரக் கொள்கையில் தவறாகவும் புறம் ஒதுக்கியும் சித்திரிக்கப்பட்டுள்ளமை -

போன்றவை, சமாதான நடவடிக்கைகள் மீதான மக்களினதும் புலிகளின் தலைமையினதும் நம்பிக்கையை மோசமாகப் பாதித்திருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையில் பேச்சுக்களில் தான் பங்குபற்றுவதை இப்போதைக்கு இடைநிறுத்த புலிகளின் தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளது.

ஜூன் மாதம் ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் நாம் பங்குபற்றமாட்டோம்.

இந்த மனஉளைச்சலான முடிவுக்கு நாம் தள்ளப்பட்டிருப்பது குறித்து கவலைதெரிவிக்கும் அதேசமயம், இனப் பிரச்சினைக்கு பேச்சு மூலம் அரசியல் தீர்வு காண்பதில் எமக்குள்ள உறுதிப்பாட்டை மீளவும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

வழமைநிலைமை ஏற்படுத்துவது தொடர்பான யுத்தநிறுத்த ஏற்பாடுகளை - மேலும் காலதாமதம் செய்யாமல் - உடனடியாக முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமும் வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்த அகதிகளை உடனடியாக மீளக்குடியமர அனுமதிப்பதன் மூலமும் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புமாறு இலங்கை அரசைக் கோருகின்றோம்.

யுத்தத்தினால் அழிவுற்ற தமிழர் தேசத்தை புனரமைப்பதற்கு ஏற்ற வகையில் தனது பொருளாதார அபிவிருத்தி உத்தியை மீளாய்வு செய்யும்படியும் நாம் அரசைக் கோருகின்றோம். - என்று உள்ளது. (ம-3)

## சந்தேக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, கடந்த வியாழக்கிழமை இதுபோன்ற மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

எதிரிகள் அனைவருக்கும் பிணை வழங்குமாறு சட்டமாஅதிபர் திணைக்களம் சம்மதம் தெரிவித்தபோதிலும், ட்ரயல் அட்பார் நீதிபதிகள் குழுவில் இருவர் பிணை வழங்க மறுத்திருப்பது சட்டவிரோதமான செயல் என மனுதாரர்கள் தற்போதைய மனுக்களில் குறிப்பிட்டுள்ளனர்.

சட்டமா அதிபர் திணைக்களம் பிணை வழங்க சம்மதம் தெரிவித்த பின் விசேடமான வேறு காரணங்கள் இருந்தாலே தவிர நீதிபதிகள் பிணை அனுமதி வழங்குவது கட்டாயம் எனவும் தற்போதைய மனுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குற்றவியல் சட்டக்கோவையின் 452ஆவது பிரிவின்கீழ் பிணை வழங்க சட்டமாஅதிபருக்கு மட்டுமே பூரண அதிகாரம் உண்டு என்பதும் மனுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)


LIONAIR

LANKA'S PRIDE IN THE SKY

யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்

பாதுகாப்பான – சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :

லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்

யாழ்ப்பாணம்

# 1-T, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-222 6026 HOTLINE: 0777-382343

021-222 6035 072-401423

(C/27281)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.